www.eelamview.com


## அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமான முன்நிகழ்வுகள் பற்றி
## மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன்

# இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்க வேண்டும்;

# படைகளை விலக்கி நெருக்கடியைத் தணிக்க வேண்டும்;

# சுமுகமான இயல்புநிலையைத் தோற்றுவிக்க வேண்டும்!

**"தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடாத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரை, இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவப் பலத்தைத் துரும்புச்சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைக்காகப் பேரம் பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர் பார்க்க முடியாது. அதனாற்தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்புநிலையிற் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். படைகளை விலக்குதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியற் பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாடு காணவும் நாம் தயாராக இருக்கின்றோம்."**




# விடுதலைப்புலிகள்

குரல்: 72 ஐப்பசி - கார்த்திகை 1996 அன்பளிப்பு: 5/-


மாவீரர் நாளை முன்னிட்டு ஆற்றிய உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது உரை இங்கே முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் வணக்கத்திற்குரிய நாள்; ஆயிரமாயிரம் சுதந்திரச் சுடர்களாக எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நிற்கும் எமது மாவீரர்களுக்கு இன்று நாம் வணக்கம் செலுத்தி கௌரவிக்கும் புனித நாள்!

இன்றைய நாள், சாவுக்குக் கலங்கியழும் சோக நாளல்ல; அன்றி, துயரத்தில் உறைந்து போகும் துக்க நாளுமல்ல; இன்று தியாகத்தின் திருநாள்!

ஒரு சத்திய இலட்சியத்திற்காகத் தம் இன்னுயிர்களை ஈகம் செய்த எம் இனிய வீரர்களை இன்று நாம் எமது நெஞ்சப் பசுமையில் நினைவு கூர்ந்து கௌரவிப்போம். அவர்களது வீரத்திற்கும், அதியுயர்ந்த தியாகத்திற்கும் தலை குனிந்து வணக்கம் தெரிவிப்போம்.

ஈடிணையற்ற ஈகங்கள் மூலம் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை அளப்பற்றது. எமது மக்கள் இறைமை பெற்று பெருமையுடன் வாழ வேண்டும் என்ற இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு போராட்டத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புகள் எமது மண்ணில், எமது காலத்தில் எமது போராட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது. மானிட வரலாறு கண்டிராத ஒரு வீர காவியம் எமது மண்ணிற் படைக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட காலமாக, தமிழரின் விடுதலை எழுச்சி, நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைத் தீயை அணைத்துவிட எமது எதிரியோடு கைகோர்த்து நின்று எத்தனையோ சக்திகள், எத்தனையோ வகைகளில் அயராது முனைந்துவருகின்றன. இதனால், எமது →


# தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு


www.eelamview.com

www.eelamview.com



## புலிகளின் குரல்

# சந்திரிகா: வாளேந்திய சிங்கம்

ஜனாதிபதிப் பதவியைப் பிடிப்பதற்காக, இரண்டு வருடங்களுக்குமுன், சந்திரிகா அம்மையார் பயன்படுத்திய பிரசார யுத்திகள், இலேசில் மறந்துவிடமுடியாதவை.

இலங்கைத்தீவின் வன்முறை அரசியலுக்குப் பலியான அரசியல்வாதிகளின் நிழல்படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்துவிட்டு, 'இவர்களின் மனைவியர் அனுபவித்த சோகங்களை மற்றைய பெண்களும் சந்திக்காது தடுக்க என்னைப் பதவியில் அமர்த்துங்கள்' என்று வேண்டியிருந்தார்.

பல்லாயிரம் பேரினது உயிர்களைக் காவு கொண்டுவிட்ட இந்தக் கோரயுத்தத்தை நிறுத்தி – சமாதானத்தை நிலைநாட்டத் தன்னை ஜனாதிபதியாக்கும்படி மக்களிடம் கோரியிருந்தார்.

இவற்றைப்போல, மக்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் இன்னும்பல தேர்தல் வாக்குறுதிகளை, உணர்ச்சிகலந்து அவர் அள்ளி எறிந்தார்,

ஆயினும், அனைத்தையும் நிர்ணயிக்கின்ற சர்வ அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவி அம்மையாரின் கைகளிற்குவந்ததும், பரிவுகாட்டுவதற்குப்பதிலாக ஆணவத்தையே வெளிப்படுத்தினார். சேவைசெய்வதற்குப் பதிலாக அதிகாரத்தைப் பிரயோகித்தார்.

'தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவேன்' என்று உறுதிசொன்னவர், போரைத்தீவிரமாக்கி பொருளாதாரத்தடையை மேலும் இறுக்கினார்.

''புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோதே போருக்கான இராணுவத் தயார்படுத்தல்களையும் நான் செய்துகொண்டிருந்தேன்'' என – பேச்சு முறிவடைந்தபின் – அம்மையார் தெரிவித்தார்.

'இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு' என்று வலியுறுத்திச் சொன்னவர், போர்மூலம் ஒரு இராணுவத் தீர்வை தமிழினத்தின்மீது திணிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்துவருகின்றார்.

'சமாதானப்புறா' என்ற எதிர்பார்ப்பிற்குப் பதிலாக 'வாளேந்திய சிங்க'த்தைத்தான் தமிழ் மக்கள் எதிர்கொண்டனர்.

நவாலித் தேவாலயத்திலும், நாகர்கோவிற் பாடசாலையிலும் – வான் படையின் குண்டு வீச்சிற்கு உள்ளாகி – கொலையுண்ட தமிழர்களின் துயரக்கதைகளை வெளியுலகம் அறியவிடாது மூடிமறைக்க முயன்றதுடன், அதில் அநியாயமாகப் பலியாகிய அப்பாவித் தமிழர்கள் பற்றியோ, அல்லது ஒன்றுமறியாத பள்ளிச் சிறுவர்கள் பற்றியோ, ஒரு அனுதாபவார்த்தை கூடப் பேசவிரும்பாத அம்மையார், குண்டு வெடிப்புக்களில் சிங்கள மக்கள் இறந்துபடும்போது உலகைக்கூட்டி ஒப்பாரிவைக்கின்றார்!

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பின்போது – உயிருக்கு அஞ்சி, உடமைகளையும் விட்டுவிட்டு – இடம்பெயர்ந்து ஓடிய ஐந்து இலட்சம் தமிழர்கள், தெரு ஓரங்களில், துயர்மிகு அகதி வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருந்தபோது, அந்த அவலத்தைவிதைத்த சிங்களத் தளபதிகளுக்கு – கொழும்பில் வைத்து – விருதுகள்வழங்கிக் கௌரவித்து, அம்மையார் விழா எடுத்துக்கொண்டிருந்தார்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையால் காடுகளுக்குள் தஞ்சமடைந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை படை விமானங்களும், பட்டினிப்பேயும் சேர்ந்துவிரட்டிய போது வாய்மூடி மௌனியாக இருந்த அம்மையார், தமிழரைக் குடியெழுப்பிக்கலைக்கும் இலக்குடன் நடந்த அந்தச் சமரில், காயப்பட்ட படையினருக்குச் சிகிச்சை செய்ய இரத்ததானம் செய்யும்படி அவசரமாக வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் 'இன சமத்துவத்தை ஏற்படுத்துவேன்' என்று சூளுரைத்த அம்மையார், பேரினவாத உணர்வுடன் தமிழினத்திற்கெதிரான இனப்பகைமையைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்திவருகின்றார்.

'பாம்பின்காலைப் பாம்பறியும்; போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் உணர்வுகளை நானறிவேன்!' என்ற பாணியிற் பேசிவந்த அம்மையார், தென்தமிழீழத்திலும், யாழ்ப்பாணத்திலும் பெண்களுக்கு எதிராகப் படையினர் புரியும் பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை அராஜகத்திற்கு எதிராக உருப்படியான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

பதினொரு படையினரால்பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட கிருசாந்தி குமாரசாமியின் சம்பவத்தைக் கண்டித்து, ஜனாதிபதி அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்று சிங்களப்பெண்கள் அமைப்புக்கள் சில அம்மையாரிடம், கோரிக்கை விடுத்திருந்தும் கூட, அதை ஏற்க, அவர் மறுத்துவிட்டார்.

சந்திரிகா அம்மையாரைப் பொறுத்தவரை கிருசாந்தி மற்றும் அவரது தாயார் என்போர் பெண்கள் என்பதைவிட அவர்கள் 'தமிழர்கள்' என்றே, அவர் நோக்குகின்றார். அதனால் தான், சிங்கள இனத்தைச் சேர்ந்த படையினரைக் கண்டித்து – தமிழினத்திற்குச் சார்பாக – அறிக்கை வெளியிட, அம்மையார் மறுத்துள்ளார்.

உண்மை இவ்விதம் இருக்க, அண்மையில், சந்திரிகா அம்மையார் கூறியதாக 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது!

''பௌத்த சின்னங்கள் தாக்கப்பட்டால் தமிழர்களை நான் நேரடியாக அழிப்பேன்'' என்று ஒரு உயர்மட்டக் கலந்துரையாடலில் அம்மையார், கோபத்துடன் கூறியதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இதை அம்மையார் மறுத்திருந்தாலும், இவ்விதம் அவர் கூறியதை நிரூபிக்க தன்னிடம் ஆதாரம் உண்டு என்று 'சண்டேலீடர்' சவால் விட்டிருக்கிறது.

'தமிழர்களை அழிப்பேன்' என்று அம்மையார் கர்ச்சித்திருப்பது ஆச்சரியமான விடயமல்ல; அவரது மனமெங்கும் வியாபித்திருக்கும் பேரினவாத உணர்வு அவரையும் மீறி வெளிப்பட்டுவிட்டது என்பதே உண்மையாகும்.

'' அடக்குமுறையை ஒழித்து – இனசமத்துவத்தை நிலைநாட்டி – மனித உரிமைகளைப் பாதுகாப்பேன் '' என்று வார்த்தை ஜாலம் புரிந்த அம்மையார், உண்மையில், தீவிரபேரினவாதியாகவும், இராணுவதாசராகவுமே செயற்பட்டுவருகின்றார் என்பதைச், சர்வதேசம் இப்போது கண்ணெதிரே காணத்தொடங்கிவிட்டது! O

## இராணுவ ஆக்கிரமிப்பின்...

(1ஆம் பககத் தொடர்ச்சி)

சுதந்திர இயக்கம், காலத்திற்குக் காலம் பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. எந்தவித உதவியுமின்றி, எவரது ஆதரவுமின்றி, எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளுக்கெதிராக நாம் தனித்து நின்று போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால் விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை மிகப் பெரியது! தமது உயிரையே விலையாகக் கொடுத்து தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காத்து வருபவர்கள் மாவீரர்கள். எனவே, மாவீரர்களை எமது தாயக விடுதலையின் காவற் தெய்வங்களாக நாம் கௌரவிக்க வேண்டும்!

நீண்டதாகத் தொடரும் எமது விடுதலைப் பயணத்தில் நாம் பல நெருப்பு ஆறுகளை நீந்திக் கடந்துள்ளோம். இந்த அக்கினிப் பிரவேசத்தில் நாம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்கு, எமது இலட்சிய உறுதிதான் காரணம். அடக்கு முறைக்கு ஆளாகி, இன அழிவைச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்குத் தன்னாட்சி கோரி நாம் வரித்துக் கொண்ட இலட்சியம் நேரானது; சரியானது; நியாயமானது! அன்றிலிருந்து இன்று வரை நாம் எமது கொள்கையை உறுதியாகப் பற்றி நிற்கிறோம். எமது இலட்சியமே எமது மலையானபலம். அந்த மலையான பலத்தில் நாம் நிலையாக நிற்பதால்தான் எமது இயக்கத்திற்கு ஒரு தனித்துவமும், முக்கியத்துவமும், சிறப்பான சரித்திரமும் உண்டு. தமிழீழத்தில் அதிர்ந்த அரசியற் பூகம்பங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் ஏனைய தமிழ்க் குழுக்களின் இலட்சியக் கோட்டைகள் தகர்ந்து போயின. எமது உறுதியை மட்டும் எந்தவொரு சக்தியாலும் உடைத்துவிட முடியவில்லை!

தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு, அன்று எமது உறுதிக்குப் பெரும் சவாலாக எழுந்தது. அன்றைய அந்த வரலாற்றுச் சூழலில், ஒரு உலக வல்லரசின் இராணுவ வல்லாதிக்கம் எம்மைப் பலமாக நெருக்கிய பொழுதும், நாம் எமது இலட்சியத்தை தளரவிடாது நெஞ்சுறுதியுடன் போராடினோம். அந்த ஆபத்தான கட்டத்தில் உறுதிதான் எமது இறுதி ஆயுதமாக இருந்தது. அந்த ஆன்மீக பலத்துடன் உலகின் மிகப் பெரிய ஆயுதபலத்தை எம்மால் எதிர் கொள்ள முடிந்தது.

இன்று நாம் ஒரு புதிய சவாலை சந்தித்து நிற்கிறோம். ஒரு புதிய ஆக்கிரமிப்புப் போரை எதிர் கொண்டு நிற்கிறோம்.

எமது வரலாற்றுப் பகைச் சக்தியான சிங்கள – பௌத்த பேரினவாதம், 'சந்திரிகா அரசு' என்ற நிறுவன வடிவம் கொண்டு, தமிழினத்திற்கு எதிராக இன அழிப்புப் போர் ஒன்றை நடத்தி வருகிறது. சிங்களத்தின் முழுப் படை பலத்தையும் ஒன்று திரட்டி வடபுலத்திற் தமிழரின் வரலாற்று நிலங்களை ஆக்கிரமித்து நிற்கிறது.

பெரிய தொகையிற் படையணிகளையும் பெரிய அளவில் வெடிப் பொருள் சக்தியையும் பயன்படுத்தி, புலிகளின் படை வலுவை அழிப்பதுதான் இந்த ஆக்கிரமிப்புப் போரின் முக்கிய இராணுவ மூலோபாயமாக அமைந்தது. ஆயினும் இந்தக் குறிக்கோளை அடைவதில் சிங்கள இராணுவம் படுதோல்வியையே சந்தித்திருக்கிறது.

நர்ன்கு புறமும் கடல் சூழ்ந்த குடா்நாட்டுப் பகுதியில், புவியியல் ரீதியாக எமக்குப் பாதகமான நிலப் பரப்பில், பெரும் மரபுவழிச் சமர்களைத் தொடுத்து எமது படை வலுவை அழிக்க இராணுவம் திட்டமிட்டது. இந்தச் சூழ்ச்சிகரத் திட்டத்தை நாம் நன்கறிவோம். ஆகவே, எதிரியின் இராணுவப் பொறிக்குள்சிக்கிவிடாது, மிகவும் சாதுரியமாகப் போரிட்டு, தந்திரோபாயமான படை நகர்வுகளை மேற்கொண்டு, எமது படை வலுவைச் சீர்குலையாது நாம் பாதுகாத்தோம். இதன் காரணமாக, யாழ்ப்பாணச் சமரில் இராணுவத்தின் முக்கிய மூலோபாயம் கைகூடவில்லை என உறுதியாகச் சொல்லலாம்.

கெரில்லாப் போர் முறையைக் கையாளும் ஒரு விடுதலை இயக்கம், பெரும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் நோக்கில், படையணிகளைப் பின்நகர்த்துவதும் சில நிலப்பகுதிகளிற் கட்டுப்பாட்டை இழப்பதும் தோல்வியைக் குறிக்காது; இதனை ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே கொள்ளலாம். படை வலுவையும், போராட்ட உறுதியையும் தக்கவைத்துக் கொண்டால் எமக்குச் சாதகமான புறநிலைச் சூழலில், நாம் தெரிவுசெய்யும் நேரத்தில், தாக்குதல்களை நடத்தி எதிரியின் படைவலுவை எம்மால் அழிக்கமுடியும். இதனால் இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்பது சாத்தியமாகும். முல்லைத்தீவில் நாம் ஈட்டிய மகத்தான இராணுவச் சாதனை இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தாக்குதலில் சிங்களப் படைகளுக்கு பாரிய உயிர்ச்சேதத்தை விளைவித்து, எதிரியின் படைவலுவைப் பலவீனப்படுத்தியதோடு இழந்த பிரதேசத்தையும் நாம் மீட்டெடுக்க முடிந்தது. எமது படைவலுவை நாம் தக்கவைத்துக்கொண்டதாற்தான் இந்த வெற்றியை எம்மால் ஈட்ட முடிந்தது. அத்தோடு எமது படை வலுவை நாம் மேலும் பலப்படுத்தவும் முடிந்தது.

''சமாதானத்திற்கான போர்'' என்றும், ''தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு'' என்றும் பரப்புரை செய்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்புப் போர், தமிழரின் அமைதியைக்குலைத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரை அடிமைகளாக்கி, தமிழரின் சமூக பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழருக்கு என்றுமில்லாத பெரும் அவலத்தைக் கொடுத்திருக்கிறது. சமாதானத் தத்துவம் பேசி உலகத்தை ஏமாற்றியபோதும், இது தமிழருக்கு எதிரான போர் என்பதை, சந்திரிகா அரசு நடைமுறையிற் காட்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது! பாதுகாப்பு வலயங்களாகத் துண்டு போடப்பட்டு, மண்மேட்டு அரண்களும், முட்கம்பி வேலிகளும், மூலைக்கு மூலை காவற் சாவடிகளுமாகக் காட்சிதரும் தமிழரின் இப்புகழ்மிக்க வரலாற்று மண்ணில் ஒரு இராணுவப் பயங்கரவாத ஆட்சியே நடைபெறுகிறது. கைதுகளும், சிறைவைப்பும், சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும், காணாமற் போதலும், பின் மனித புதைகுழிகளுக்குள் கண்டெடுக்கப்படுவதுமாக நிகழ்ந்துவரும் கோரமான சம்பவங்கள் ஓர் உண்மையைப் புலப்படுத்திக் காட்டுகின்றன. அதாவது, இராணுவ ஆட்சி நடைபெறும் தமிழ்ப் பகுதிகளில் மிக மோசமான ஒரு இன அழிப்புக்கொள்கை மறைமுகமாக செயற்படுகிறது என்பதையே இது காட்டுகிறது.

ஆக்கிரமித்த பகுதிகளில் நிகழும் அட்டூழியங்களும், மற்றும் பரவலாக தென்னிலங்கையில் நடைபெறும் தமிழர் விரோத நடவடிக்கைகளும் சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. முந்திய இனவாத அரசுகளைவிட சந்திரிகாவின் ஆட்சிபீடம் தமிழரின் தேசிய ஆன்மாவை ஆழமாகப் புண்படுத்தியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

சந்திரிகா அரசு தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பதையும், தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப் போவதில்லை என்பதையும் நாம் ஆரம்பத்திலிருந்தே உணர்ந்துகொண்டோம். சமாதானப் பேச்சுக்களின்போது சந்திரிகா அரசு கடைப்பிடித்த கடுமையான போக்கும், விட்டுக்கொடாத மனப்பாங்கும் எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. தமிழரின் சாதாரண வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அற்ப சலுகைகளை மறுத்து, இராணுவத்தின் மேலாதிக்க நலன்களைப்பேண முனைந்ததால் அன்றைய பேச்சுக்கள் அர்த்தமற்றதாக முடிவுற்றன. இராணுவப் பலத்திலும், இராணுவ அணுகுமுறையிலும், இராணுவத் தீர்விலும் நம்பிக்கை கொண்டிருந்ததால் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் கொடாது, பேச்சுக்கள் முறிவடைவற்கான புறநிலைகளையும் சந்திரிகா அரசே உருவாக்கியது! தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத

(12 ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# ரத்வத்தவின் இராணுவ மூலோபாயமும் தமிழரின் விடுதலைப் போராட்டமும்

கிளிநொச்சியைக் கைப்பற்றியகையோடு 2.10.96 அன்று, பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூட்டினார்.

கடந்த ஒன்றரைவருடகாலமாக தான் நடைமுறைப்படுத்திவரும் இராணுவ மூலோபாயத்தின் [ Mjljtary Strategy ] வெற்றிபற்றி பெருமிதத்துடன் அறிவிக்கவே, பத்திரிகையாளர்களை அழைத்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கட்டடத்தில், ரத்வத்த தலைமையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தளுவத்த, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகர, வான்படைத் தளபதி எயார் வைஸ் மாசல் ஒலிவர் ரணசிங்க, பொலிஸ் மா அதிபர் ராஜகுரு மற்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க ஆகியோரும் கூடியிருந்தனர்.

வடக்கை சிங்கள இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் கொண்டுவருவதுதான், ரத்வத்த வரைந்த இரா்ணுவ மூலோபா்யத்தின் இலக்காகும்.

இதைச் சாதிப்பதற்காக கிழக்கைக் கைவிட்டாலும் நட்டம் ஒன்றும் இல்லை என்பது, அவரின் நிலைப்பாடு. ஏனெனில் புலிகள் இயக்கத்தின் உயிர்மையம் வடக்கிலேயே உள்ளது; வடக்கை ஆக்கிரமிப்பதன்மூலம் புலிகள் இயக்கத்தை அழித்து – தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒழித்துவிட முடியும் என்று, ரத்வத்த நம்புகின்றார். இதன் அடிப்படையிலேயே, கிழக்கு மாகாணத்தில் இருந்து முன்னர் கணிசமான படையினரை விடுவித்து, குடாநாட்டுப் படையெடுப்பில் பங்கேற்கவைத்தார். இப்போது, மேலும் படையினரைக் கிழக்கில் இருந்து எடுத்தாவது வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கைகளைச் செய்வது என்று, ரத்வத்த சூளுரைத்துள்ளார்.

இதேவேளை, ஜே. ஆர். அரசாங்கமும் பிரேமதாசா அரசாங்கமும், ரத்வத்தவின் இந்த இராணுவ மூலோபாயத்திற்கு முற்றிலும் நேர்மாறான இராணுவ மூலோபாயத்தையே, தமது ஆட்சிக்காலங்களில் செயற்படுத்தி வந்தன.

கிழக்கு மாகாணத்தை சிங்கள இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்பதுதான், ஐ. தே. கட்சி அரசாங்கங்கள் அமுல்படுத்திய இராணுவ மூலோபாயத்தின் நோக்கமாகும்.

மூன்று இன மக்களும் கலந்துவாழும் கிழக்கில் புலிகளுக்கு செல்வாக்குஇல்லை என்றுகாட்டி, 'புலிகள் ஒரு அரசியல் சக்தி அல்ல' என சர்வதேசத்திற்கு உணர்த்த, ஐ. தே. கட்சியின் தலைமைப்பீடம் விரும்பியது. அத்துடன், படிப்படியாக கிழக்கைச் சிங்களமயப்படுத்தி – சிங்கள தேசத்துடன் அதை ஒன்றாகக் கலக்கச்செய்து, நிரந்தரமாக வடக்கில் இருந்து கிழக்கைப் பிரித்துவிடவும் நினைத்தது. சுருக்கமாகச் சொன்னால், தமிழரின் தாயகத்தை பிரித்துச்சிதைத்து _ தமிழினத்தின் தேசியபலத்தை நசுக்கிவிடுவதே, அந்த இராணுவ மூலோபாயத்தின் அரசியல் இலக்கு ஆகும். இதைச் சாதிப்பதற்காக, ஐ. தே. கட்சி அரசாங்கங்கள், சிங்களப் படைபலத்தின் அரைப்பங்கை கிழக்கு மர்காணத்தில் நிறுத்தி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

''சந்திரிகா அரசாங்கம் பதவி ஏற்கும்போது ( ஆவணி 94 ) சிங்களப் படையின் மொத்த ஆட்பலத்தில் 45 வீதத்தினர் கிழக்கில் நிறுத்தப்பட்டிருந்தனர்'' என, அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில், இராணுவத் தளபதி தகவல் வெளியிட்டார். மேலும் அவர் தகவல் வெளியிடுகையில், ''எல்லைப்புறங்களில் 22 வீதப் படையினர் நின்றனர்; கொழும்பில் 12 வீதப் படையினர் நிலைகொண்டிருந்தனர்; வடக்கில் 20 வீதப் படையினர் மட்டுமே நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்'' எனக் கூறினார்.



முல்லைத்தீவில் உயிரிழந்த ரத்வத்தவின் படையினர்.

**அரைகுறைத் தீர்வுத்திட்டமொன்றை அடிப்படையாகக்கொண்டு அரசியல் வழிமுறைகள்மூலமும், "சமாதானத்திற்கான போர்" என்ற தந்திரோபாயத்தை அடிப்படையாகக்கொண்டு இராணுவ செயற்பாடுகள்மூலமும் தமிழரின் தேசிய தனித்துவத்தை அழிக்க, தற்போதைய சிங்கள அரசாங்கம் முயல்கின்றது.**

மொத்தப் படைபலத்தில் அரைப்பங்கைக் கிழக்கில் முடக்கிவைத்திருந்த ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் இராணுவ மூலோபாயம் எதையும் சாதிக்கவில்லை என, ரத்வத்த கண்டன விமர்சனம் செய்தார்.

'' ஐ. தே. கட்சியின் இராணுவ மூலோபாயத்தைவிட பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் இராணுவ மூலோபாயம் சிறந்தது'' என்று, இராணுவத் தளபதி தளுவத்த, பத்திரிகையாளர் முன்னிலையில் சான்றிதழ் வழங்கினார்.

தங்களது இராணுவ மூலோபாயத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதற்காக, புலிகள் இயக்கம் கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ளது என எடுத்துக்கூறிய ரத்வத்த, புலிகளின் எதிர் மூலோபாயத்திற்கு தாம் பலியாகிவிடமாட்டார் எனவும் வலியுறுத்திக் கூறினார்.

தனது இராணுவ மூலோபாயம் பெருவெற்றியைப் பெற்றுவருகின்றது என்பதைக் காட்ட, ரத்வத்த அவர்கள், குடாநாட்டு ஆக்கிரமிப்பையும் கிளிநொச்சியைக் கைப்பற்றியதையும் உதாரணம் காட்ட விரும்புகின்றார்.

ஆனால், ரத்வத்தவின் மூலோபாயத்தால், கிழக்கில் அரசுப் படைகள் தமது பிடியை இழந்து வருகின்றன; சிங்களக் குடியேற்றவாசிகளும் எல்லைப்புறச் சிங்களவர்களும் தமது வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர். இது சிங்கள இனத்திற்கு பாரிய இழப்பு; ஒரு அரசியல் பின்னடைவு என, சந்திரிகா – ரத்வத்த அரசாங்கத்தின் எதிரிகள் பரப்புரை செய்கின்றனர்.

ஆயினும், வடக்கை ஒரு கைபார்த்துவிட்டால், பின்னர் கிழக்கைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர தனக்கு அதிக நாட்கள் எடுக்காது என்பது – தனது மூலோபாயத்தை எதிர்ப்பவர்களுக்கு – ரத்வத்த கொடுக்க விரும்பும் உத்தரவாதமாகும்.

எனினும், கிழக்கையும் இழந்து – வடக்கையும் பறிகொடுக்கும் இழிநிலைக்கு, ரத்வத்த சிங்கள இனத்தை இட்டுச்செல்லப்போகின்றார் என, சந்திரிகா அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் அபாய எச்சரிக்கை செய்துள்ளனர்.

அதாவது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக தனது அரசாங்கம் உருவாக்கிய இராணுவ மூலோபாயம்தான் அதிக பயன்தரக்கூடியது என ஐ. தே. கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் கருத்துப்போர் புரிந்துவருகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்த – கடைப்பிடித்து வரும் இந்த இரண்டுவிதமான இராணுவ மூலோபாயங்களும், தமிழ் இன அழிப்பை நோக்கமாகக்கொண்ட அரசியல் – இராணுவச் செயற்பாடுகளேயாகும்.

ஐ. தே. கட்சியின் இராணுவ மூலோபாயம், கிழக்குவாழ் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை முதன்மைப்படுத்துகின்றது; ரத்வததவின் இராணுவ மூலோபாயம், வடக்குவாழ் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு முன்னுரிமை கொடுக்கின்றது.

இதேவேளை, இரண்டு பகுதியினதும் இராணுவ மூலோபாயங்களின் இராணுவ இலக்கு, தமிழரின் தேசியப் பலத்தைச் சிதைத்து – தமிழ் மக்களை அரசியல், இராணுவ பலமற்ற உதிரி மனிதர்களாக இந்தத்தீவில் உலவ விடுவதுதான்.

இலங்கைத்தீவை சிங்கள – பௌத்த தேசமாக மார்ற்றி அமைக்கவேண்டும் என்பது,சிங்களப் பேரினவாதத்தின் நீண்டநாளைய இலட்சியமாகும். அரசியல் வழிமுறைகள்மூலமும் இராணுவ அணுகுமுறைகள் வாயிலாகவும் இந்த இலட்சியத்தை அடைய, பேரினவாதம் முயற்சி செய்கின்றது. அரைகுறைத் தீர்வுத்திட்டமொன்றை அடிப்படையாகக்கொண்டு அரசியல் வழிமுறைகள்மூலமும், ''சமாதானத்திற்கான போர்'' என்ற தந்திரோபாயத்தை அடிப்படையாகக்கொண்டு இராணுவ செயற்பாடுகள் மூலமும் தமிழரின் தேசிய தனித்துவத்தை அழிக்க, தற்போதைய சிங்கள அரசாங்கம் முயல்கின்றது.

ஒரு மூலோ்பாயம் வெற்றிபெறாதுவிடும்போது, வேறு ஒரு மூலோபாயம் புதிதாகப் பயன்படுத்தப்படுகின்றது. எந்தக்கட்சி அமுல்படுத்தினாலும், இரண்டு மூலோபாயங்களும் சிங்களப் பேரினவாதத்தின் திட்டங்களேயாகும்.

ஆயினும், சிங்கள அரசாங்கங்கள் பயன்படுத்திவரும் ஒவ்வொரு அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயத்தையும் முறியடிப்பதற்கென – காலத்திற்குக் காலம் – தலைவர் பிரபாகரன் அவர்கள், எதிர் மூலோபாயங்களையும் எதிர்த் தந்திரோபாயங்களையும் உருவாக்கிப் பயன்படுத்தி, சிங்களப் பேரினவாதத்தின் நாசகாரத் திட்டங்களை முறியடிக்க முயன்றுவருகிறார்! ○




www.eelamview.com

www.eelamview.com



# 'சத்ஜய' படையெடுப்பும் புலிகளின் எதிர்ச் சமரும்




சத்ஜய கட்டம்-1, கட்டம்-2— படைநகர்வுகளும் எதிர்ச்சமர்களும்.

**வ**ன்னிப் படையெடுப்பிற்கான பிரதான பொருதரங்கத்தை சிங்களம் ஆனையிறவுத் தளத்திலிருந்து திறந்துவிட்டது.

'சத்ஜய' நடவடிக்கை அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் – முல்லைத்தீவில் புலிகள் பெற்ற எண்ணுதற்கரிய வெற்றியையும், தம்மீது சுமத்தப்பட்டுவிட்ட அவமானகரமான தோல்வியையும் ஈடுகட்டிச் சமப்படுத்துவதாகவே இருந்தபோதும் –

இப்போது – புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் இறுதி அத்தியாயம் என்ற வடிவத்தை சிங்களத் தலைமை அதற்குக் கொடுத்துவிட்டது.

70 நாட்களாக மூன்று கட்டங்களில் நகர்த்தப்பட்ட 'சத்ஜய' படையெடுப்பு, 12 கிலோ மீற்றர்கள் முன்னேறி கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதுடன் – அடுத்த நகர்விற்கான தயார்ப்படுத்தலுக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

'சத்ஜய' நடவடிக்கைத் தொடரின் முதலாம் கட்டம் ஆடி 26 ஆம் திகதி ஆரம்பித்தது.

உப்பளப் பகுதியிலிருந்த ஆனையிறவுத் தளத்தின் தென்புற முன்னரங்க நிலைகளிலிருந்து, பரந்தனை நோக்கிய முன்னேற்றத்தை சிங்களத் துருப்புக்கள், இருள் கலையும் அதிகாலையில் ஆரம்பித்தனர்.

பிரதான வீதிக்கும் புகையிரதப் பாதைக்கும் அருகே நகர்ந்து, புலிகளின் தொடர் காப்பரண் பகுதியை உடைத்து முன்னேறும் எதிரியின் ஆரம்ப முயற்சி கைகூடாமல் போன அதே பொழுதில் –

மாற்று வழியாக, பிரதான வீதிக்குக் கிழக்கே 2 கிலோ மீற்றர் தூரத்தில் தட்டுவன் கொட்டிப் பகுதியூடாக முன்னேற எடுத்த முயற்சி அவனுக்குச் சாத்தியமானதாகியது.

பெருமெடுப்பில் நகரும் படையினரை மிகச் சில படைப்பிரிவுகள் கொண்டு வழிமறித்து மோதுவது சாத்தியமற்றது என்பதாலும், சாதகமற்ற அந்தக் களத்தில் கடும் எதிர்த் தாக்குதலில் இறங்குவது பெருமழிவுக்கே வழிவகுக்கும் என்பதாலும் –

மட்டுப்படுத்தப்பட்ட வகையான ஒரு சண்டையை நடாத்தியவண்ணம், தந்திரோபாயப் பின்வாங்கலொன்றைப் புலிகள் செய்யவேண்டியிருந்தது.

தனக்கெதிராக தீவிரம் குறைந்த மோதலையே புலிகள் நடாத்தியதன் காரணமாகச் சுலபமாக முன்னேறிய எதிரியால் – அன்றைய பகற்பொழுது முடிவதற்குள்ளாகவே –

6 கிலோ மீற்றர் தூரம் நகர்ந்து பரந்தன் சந்தியைக் கைப்பற்றவும், அதுவரையான இடைத்தூரத்தில் பிரதான வீதிக்கு மேற்கே 1 கிலோ மீற்றருக்கும், கிழக்கே 2 கிலோ மீற்றருக்கும் அகன்று நிலைகொள்ளவும் முடிந்தது.

அன்றைய சண்டையில் தனது 16 துருப்புக்கள் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்தது. எமது 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தொடர்ந்த எட்டு நாட்களாக – புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தில் காப்பு நிலைகளைப் பலப்படுத்தியதுடன், தன் சண்டையணிகளை மீளொழுங்கு செய்து தயார்ப்படுத்திக்கொண்ட எதிரியுடன் நடந்த மோதல்களில் மேலும் 5 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஒன்பதாம் நாள் –

ஆவணி 4 ஆம் திகதி, 'சத்ஜய'வின் 2 ஆம் கட்டத்தை எதிரி ஆரம்பித்தான்.

பரந்தனைச் சிரமமின்றிக் கைப்பற்ற முடிந்ததனால், முல்லைத்தீவில் புலிகளின் ஆட்தொகை வெகுவாகப் பலவீனப்பட்டுவிட்டதாகக் கருதிலெடுத்த சிங்களத் தலைமை புலிகளின் போர் வலு பற்றிய தவறான கணிப்பீட்டினைச் செய்ததால், 'சத்ஜய'வின் 2 ஆம் கட்டத்தின் மீது பெரு நம்பிக்கை வைத்து, கிளிநொச்சி நோக்கிய இறுதி நகர்வு எனப் பிரச்சாரம் செய்தது.

சிங்களத்தின் புகழ்பூத்த போரணியான 'சிறப்புப் படை'க் 'கொமாண்டோ'க்கள், மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவின் வழி நடாத்தலின் கீழ் களத்தைத் திறந்தனர்.

பரந்தனிலிருந்து நகரத் தொடங்கிய துருப்புக்கள், ஒரு கிலோ மீற்றருக்கும் மிகக் குறைவான தூரத்திற்குள் பிறை வடிவில் தம்மை வளைத்து நுட்ப வியூகமிட்டுக் காத்திருந்த புலிகளைச் சந்தித்தபோது வெடித்த சமர் அசாதாரணமானது.

எதிரி பல முனைகளூடு முன்னேற முயன்றான்; புலிகளின் அரண்களை உடைத்தெறிய தன்னால் இயலுமான வரைக்கும் எத்தனித்தான்; ஒவ்வொரு முனையும் முறியடிக்கப்படும்போது இன்னொரு முனையைத் திறந்து முயன்றான். விடிந்ததிலிருந்து இருளும் வரை – பகற்பொழுது முழுவதுமே – பரந்தன் பகுதி பெரியதொரு போர்க்களமாக மாறியிருந்தது.

பிரதான வீதிக்குக் கிழக்குப் பக்கமாக முன்னேறியவர்களைப் புலிகள் இரு முனைகளில் மறித்தனர். ஒரு முனையில் இரு 'ராங்க்'குகள் தாக்கியெரிக்கப்பட மேலும் ஒன்று சேதப்படுத்தப்பட்டது. மறுமுனையில் ஒரு 'ராங்க்' தாக்கியழிக்கப்பட மேலும் இரண்டு சேதப்படுத்தப்பட்டன. இதே சமயத்தில் பிரதான வீதிக்கு மேற்குப் பக்கமாக முன்னேறியவர்களைப் பூநகரி வீதிக்கு வலதுபுறமும், இடதுபுறமும் இரு முனைகளில் எதிர்கொண்டு தடுத்தனர்.

முதல்நாள் சண்டைகளில் மட்டும் 75 படையினர் கொல்லப்பட்டதையும், தொடர்ந்து மூன்று நாட்களாக கடும் முயற்சியெடுத்த எதிரியை முறியடித்த சண்டைகளில் மேலும் 75 வரையான படையினர் கொல்லப்பட்டதையும் களச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின. இந்தச் சண்டைகளில் எமது 89 போராளிகள் வீரச்சாவடைந்தனர். அதைத் தொடர்ந்த நாட்களில் 'சத்ஜய'வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கும்வரை, எதிரியின் முன்னரங்கப் பகுதிகளில் நடந்த மோதல்களில் மேலும் 11 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

'சத்ஜய'வின் இரண்டாம் கட்டத்தை முளையிலேயே முறியடித்த புலிகளின் சமர், பகைத் தளபதிகளைத் திகைப்பில் ஆழ்த்தியது. யாழ்ப்பாணச் சமரிலேயே இல்லாத விதமாக வான்படையையும் களத்திலிறக்கியதோடு, 'றிவிரச'வில் பிரயோகித்ததை விடவும் மிகக் கூடுதலான வளங்களை ஒருங்குதிரட்டிய போதும் ஏன் தம்மால் முடியாமல் போனது என்பதே அவர்கட்கு ஆச்சரியம். புலிகளின் பெரும் படைக்கலப் பிரயோகம் தமக்கு அதிக சேதத்தைத் தந்ததனால், அவர்களை விட அதிகமான படைக்கல சக்தியைத் தாம் பிரயோகித்தபோது புலிகளுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்க வேண்டும்; அத்தோடு, முல்லைச் சமரில் ஏற்கெனவே புலிகளின் ஆட்பலம் பெருமளவில் பலவீனப்பட்டிருக்கக்கூடிய சாத்தியப்பாடும் இருக்கையில், எப்படிப் புலிகளால் எதிர்த்து நிற்க முடிந்தது; 'றிவிரச'வை விடவும் உக்கிரமான தாக்குதலை நிகழ்த்திய போதும் ஏன் துருப்புக்களால் வெல்லமுடியவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு விடைதேட முனைந்த சிங்களப் படைத்துறைத் தலைமை, முல்லைத் தளத்திலிருந்தும் வேறு வழிகளிலும் புலிகள் பெற்றிருக்கும் ஆயுத கருவிகள் காரணமாக கிளிநொச்சிப் படையெடுப்பிற்கான தன் போர் முறைத் திட்டத்தில் முழுமையான மாற்றம் செய்யவேண்டியதை மட்டுமல்ல –

தமிழீழப் போரில் தனக்கு ஒரே ஒரு வாய்ப்பாக இருந்த மரபுவழிச் சமர் முறையும் சிக்கலுக்குரியதாக மாறுவதையும் உணர்ந்தது.

இரண்டாம் கட்டத்தில் சறுக்கிய 'சத்ஜய'வை, மூன்றாம் கட்டத்திலாவது நிமிர்த்த, சிங்களத் தளபதிகள் ஒன்றரை மாத காலமாகச் சிந்தித்தனர். பரந்தன் சண்டைகளில் பெற்ற பாடங்களிலிருந்து, அடுத்த நடவடிக்கையில் புதிய வழிமுறைகளைக் கையாள்வது பற்றி ஆலோசித்தனர்.

பரந்தன் பகுதி முன்னரங்க நிலைகளுக்கப்பால் கிளிநொச்சி வரையான நேர்ப்பாதையை மையப்படுத்தி அடுக்கடுக்கான போர் வியூகங்களை இட்டிருக்கும் புலிகளின் 'மரணப் பொறி'களுக்குள் சிக்கிவிடாமல் கிளிநொச்சியை அடையும் மார்க்கத்தை, எதிரி தேடவேண்டியிருந்தது.

'சத்ஜய'வின் இரண்டாம் கட்டம் அந்த வியூகங்களுக்குள் சிக்கியே சின்னாபின்னமானது. முழு வளங்களையும் ஒருங்குதிரட்டி நாட்கணக்கில் முயன்றபோதும் உடைத்தெறிய முடியாத இறுக்க வியூகங்களாகவே அவை இருந்தன. 'கிபிர்' உந்துவிசைப் போர்விமானங்கள், 'புக்காரா', 'சியா மாசெற்றி', 'எம். ஐ. 24' தாக்குதல் வானூர்திகள் கொண்டு அவற்றை நொருக்க வந்த சிங்கள வான்படை எதையுமே சாதிக்கவில்லை. 'ஆட்டிலறி'கள், பீரங்கிக் கவச வண்டிகள், 120 மில்லி மீற்றர் மோட்டர்கள், மற்றும் சிறுரக மோட்டர்கள், ஏவுகருவிகள் சகிதம் சிறப்புக் 'கொமாண்டோ'க்கள் கையாண்ட – ஒரே சமயத்தில் பல முனைகளூடு நகரும்– தந்திரோபாயமும் துளியளவு பயனையும் தரவில்லை.

எனவே – அந்த 'அழிவு வலய'த்தை ஊட



www.eelamview.com

றுத்து நுழையும் விஷப் பரீட்சையில் மீண்டும் முயற்சிக்காமல் – அதனை விலக்கி, மேவி வளைந்து - பரந்தன் சந்தியிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த கிளிநொச்சியைக் 'கைப் பற்றுவதற்கு, 15 கிலோ மீற்றர் நீளமான ஒரு அரைவட்டச் சுற்றுப்பாதையில் படையை நகர்த்த எதிரி தீர்மானித்தான்; அதில் அவனுக்கு வேறு இலாபங்களும் இருந்தன –

சுற்றுப்பாதையொன்றில் நகர்வதன்மூலம் சமரரங்கை விரித்து பல கிலோ மீற்றர்களுக்கு அகட்டும்போது – குறிப்பிட்ட சில மையங்களில் ஒருங்குதிரட்டப்படுவதற்குப் பதிலாக – புலிகளின் பலம் ஐதாக்கப்படும்; அப்போது, தீவிரம் குறைந்த ஒரு எதிர்த் தாக்கத்தையே தனக்கு புலிகளால் கொடுக்கக்கூடியதாயிருக்கும். அத்தோடு –

திட்டமிட்ட ரீதியில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பான சண்டையரண்களுக்குள்ளிருந்து புலிகளை வெளிக் கொண்டுவந்து, போரிற்கு அரண் செய்யப்படாத புதுப் பிரதேசங்களில் சண்டைக்கிழுத்து, முல்லைத் தீவுக்கு ஈடான உயிரழிவையும் கொடுக்கலாம் என்ற கணக்குகளையும் எதிரி போட்டான்.

அவ்வாறான ஒரு சுற்று வளைவு நீள்பாதையைத் தேர்வதற்கு, எதிரிக்கு இரண்டு வழிகள் இருந்தன.

முதலாவது, கிழக்குப் புறத்தில் முரசுமோட்டைப் பகுதியூடாக கனகராயன் ஆற்றை எல்லையாகக்கொண்ட பரப்பினூடு நகர்ந்து, திருவையாறின் வழியாக கிளிநொச்சியை அடைவது.

இரண்டாவது, மேற்குப் புறத்தில் குஞ்சுப் பரந்தன் பகுதியூடாக உருத்திரபுரம் – ஜெயந்தி நகர் பிரதேசததை எல்லையாகக்கொண்ட பரப்பினூடு நகர்ந்து, டிப்போ வீதி வழியாக கிளிநொச்சியை அடைவது.

இவற்றில் – இரண்டாவது வழியில் தான் எதிரி நடவடிக்கையைச் செய்து முடித்தான். ஆனால், முதல் நகர்வை அவன் முதலாவது வழியிலேயே எடுத்தான்.

புரட்டாதி 22 ஆம் திகதி, 'சத்ஜய'வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



முன்பு – 'றிவிரச'வை விடவும் கூடுதலானவளங்களோடு சத்ஜய' வின் இரண்டாம் கட்டம் முயற்சிக்கப்பட்டது. இப்போது – இரண்டாம் கட்டததை விடவும் கூடுதலான வளங்களோடும், சுற்றுப்பாதையில் நகர்ந்து புலிகளைச் சண்டைக்கிழுத்துக் கொல்லும் புத்திசாலித்தனமான தந்திரோபாயங்களோடும் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியாவின் நெறிப்படுத்தலில், பிரிகேடியர் வசந்த பெரேரா களத்தை வழிநடாத்தினார்.

பரந்தன் பகுதியில் – யாழ். வீதிக்குச் சமாந்தரமாக – கிழக்கே 2 கிலோ மீற்றர் தூரததிலுள்ள தமது முன்னரங்க நிலைகளிலிருந்து, முல்லைத்தீவு வீதிக்கு வடக்கே ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வெளியேறி –

முரசுமோட்டைப் பகுதியை நோக்கி நகர முயன்ற சிங்களத் துருப்புக்களை 2 ஆம் கட்டைக்கு வடபுறத்தில் இடைமறித்த புலிகள், உக்கிர எதிர்த்தாக்குதலை நடாத்தி வழிமறித்து நிறுத்தினர்.

மீண்டும் மறுநாள் விடியற் பொழுதில் – அதே திசையில் தொடர்ந்து நகரத் தொடங்கிய படையினரை, 3 ஆம் கட்டைக்கும் முரசுமோட்டைக் குளத்துக்கும் இடையால் வியூகமிட்ட புலிகள், கடுமையான எதிர்ச் சண்டையை நிகழ்த்தி இடைமறித்துத் தடுத்தனர்.

கிழக்குத் திசையில் இரண்டு நாட்களாக நடந்த இந்தப் பெருஞ் சண்டைகளையடுத்து, இரண்டாம் நாள் நள்ளிரவு வேளை திடீரென, மேற்குத்திசையில் மிக வேகமான இரவு நகர்வொன்றைச் செய்ததுடன், முதலிரண்டு நாளாய் முரசுமோட்டைப் பகுதியில் தான் முன்னேறியிருந்த இடங்களிலிருந்து எதிரி பின்வாங்கவும் செய்தான்.

முரசுமோட்டைப் பகுதியூடான நகர்வை இடைநிறுத்தியமைக்கு அல்லது மேற்கொள்ளாமைக்கு, மூன்று காரணங்கள் கூறலாம்.

ஒன்று – மறைவுகளும் காப்புகளுமற்ற, வயல் நிலங்களாலான ஒரு வெளியான பிரதேசமாகவே அந்த வழி இருந்தமை.


இரண்டு – புலிகளின் கவனத்தைத் திசை திருப்புவதற்கான ஒரு தந்திரோபாய நகர்வாகவே, அது மேற்கொள்ளப்பட்டமை.

மூன்று – புலிகள் கடுமையான எதிர்ச்சண்டைகளை நிகழ்த்தியமை.

இந்தக் காரணங்களுள் ஒன்றுக்காக அந்த முனையிலிருந்து பின்வாங்கிய எதிரி – உண்மை நகர்வை, அடுத்த முனையில், இரவில் செய்தான்.

யாழ். வீதிக்குச் சமாந்தரமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தனது மேற்குப் பகுதி முன்னரங்க நிலைகளிலிருந்து, பூநகரி வீதிக்கு வடக்கே 2 கிலோ மீற்றர் தொலைவில் புறப்பட்ட எதிரித் துருப்புக்கள் –

குமாரபுரம், பெரியபரந்தன் பகுதிகளுக்கு வடபுறத்தால் நகர்ந்து, குஞ்சுப்பரந்தனூடாக வளைந்து, உருத்திரபுரம் பிரதேசத்தை அடைந்தனர்.




சத்ஜய கட்டம் 3 படைநகர்வும் அதற்கெதிரான புலிகளின் சமரும்

அந்த இரவு நகர்வுக்கு எதிராக தீவிரத் தன்மையற்ற ஒரு சண்டையிலீடுபட்டபடி புலிகள் பின்வாங்கலைச் செய்யவேண்டித்தான் இருந்தது. முடியுமான அளவுக்கு எதிரியைத் தாமதப்படுத்துவதைத் தவிர, முழுமையான ஒரு எதிர்ச் சண்டையை நடாத்த அது சாதகமான களம் அல்ல. சன்னங்களையும் குண்டுகளையும் அள்ளியிறைத்தவண்ணம் முன்னேறும் படை நகர்வை இடைமறிப்பதென்பது, மட்டுப்படுததப்பட்ட படைக்கல வளத்தினையே கொண்ட புலிகளுக்குச் சாத்தியமற்ற காரியம்.

அவதானித்து, இனங்கண்டு, குறிபார்த்துச் சண்டையிட்டு, படைக்கல வளங்களைத் தேவைக்கு அளவாக மட்டுமே பயன்படுத்துவது என்பது பகல் சண்டைகளிலேயே சாத்தியமானது. இரவிலெனில், எதிரியின் நிலைகள் – அசைவுகள் பற்றிய தெளிவான வேவுத் தகவல்கள் இருந்தாலே அது முடியும். எங்கு வருகிறான்? என்ன செய்கிறான்? எப்படி அசைகிறான்? எவ்வித வியூகத்தை இடுகிறான் என்பதை அறிய முடியாத இருளுக்குள் நகரும் துருப்புக்களைத் தடுத்துமறிக்க நினைத்து எதிர்கொள்வது, அழிவைத் தருகின்ற ஒரு களமாகவே முடியும்.

அந்த இரவு நடவடிக்கையில், மேற்குத் திசையில் 6 கிலோ மீற்றர்கள் வளைந்து நகர்ந்த துருப்புக்கள், விடியும் பொழுதில் உருத்திரபுரம் கட்டுக்குளத்துக்கருகில் நிலைகொண்டனர். →

www.eelamview.com



இரண்டாம் கட்டப் படையெடுப்பில் மிகக் கடுமையாகச் சண்டையிட்டு வழிமறித்து மோதிய புலிகள், மூன்றாம் கட்டத்திலும் அதே வகையான முறியடிப்புச் சமரை நிகழ்த்துவர் என்பதைத்தான் ஏற்கெனவே எதிரி எதிர்பார்த்திருந்தான். சண்டைக்கு அரண் செய்யப்பட்டிருக்கும் – காப்பு மிகுந்த – பிரதேசத்தில் மட்டுமன்றி, சண்டைக்குத் தயார் செய்யப்படாத– காப்புகளற்ற – பிரதேசத்திற்கு சண்டையரங்கு மாற்றப்பட்டாலும்கூட அதேவகையான முறியடிப்புச் சமரை உக்கிரமாக நிகழ்த்துவர் என்றும் அவன் நம்பினான்; அப்படி நடக்க வேண்டுமென்றுதான் விரும்பினான். அப்போது – அவர்கட்கு வாய்ப்பற்ற பிரதேசத்தில் தமக்கு முட்டாள்தனமாக முகம் கொடுக்கும் புலிகளுக்கு, பாரிய உயிரழிவை வழங்கலாம் எனத் திட்டமிட்டான்.

''எதிரி எதை விரும்புகின்றானோ அதை நீ செய்யாதே'' என்பது ஒரு போரியல் அறிவுரை. புலிகளும், எதிரி விரும்பிய–புத்திசாலித்தனமற்ற– அந்த முடிவை எடுக்கவில்லை.

போரரங்கை வழிநடாத்திக்கொண்டிருந்த தளபதிகள் பானு, தீபன் ஆகியோர் –

மாற்றமடைகின்ற களநிலவரங்களுக்கு ஏற்ப உடனுக்குடன் அறிவுறுத்தல்களைவழங்கிக்கொண்டிருந்த தலைவர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க,சமர்க்களத்தில் மாற்றத்தைச் செய்தனர்.

தம்மை அழிப்பதற்கென்றே திட்டமிட்டுக் கவர்ந்திழுக்கப்படும் அந்தப் பாதகமான மரபுவழிச் சண்டைக் களத்துக்குள் ஈர்க்கப்படாமல் புலிகள் விலகிக்கொண்டனர். ஆட்பல, படைக்கல வளங்கள் பற்றாக்குறையான – உள்ள வளத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய – புலிகளைப் போன்ற ஒரு கெரில்லா இயக்கத்திற்கு, அத்தகைய விலகல் அத்தியாவசியமானது.

எதிரியின் தந்திரோபாயப் போர்முறை நகர்வுக்கு ஏற்ப, தமது போர்முறையின் தந்திரோபாயத்தையும் புலிகள் உடனடியாக மாற்றினர்.

எதிரியை இடைமறித்துத் தடுத்துச் சமரிடுவதற்குப் பதிலாக –

அவனது நகர்வுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட சண்டையொன்றை நடாத்தியபடி அவனை முன்னேற அனுமதித்துவிட்டு –

வெற்றிக்கு வாய்ப்பான, சாதகமான களநிலைமைகளில் ஊடுருவற் தாக்குதல்களை நடாத்தி அவனுக்கு இழப்பை உண்டுபண்ணும் போர்முறைக்குப் புலிகள் மாறினர்.

புலிகளைச் சண்டைக்கிழுத்துக் கொல்லும் நுட்பமான திட்டம் தவிடுபொடியானது மட்டுமல்ல; எதிரிடையாக –

தம் வரலாற்றில் என்றுமே சந்தித்திராத ஒரு முறியடிப்புத் தாக்குதலுக்கும் சிங்களப் படை இலக்கானது.

2 ஆம் நாள் இரவு உருத்திரபுரம் கட்டுக்குளம் வரை நகர்ந்து நிலைகொண்டிருந்த படையினர், 3 ஆம் நாள் காலை, அங்கிருந்து 8 ஆம் வாய்க்கால்பகுதியை நோக்கி முன்னேறியபோது–

துருப்புக்களின் முன்னணித் தாக்குதற்படைப் பிரிவின் நகர்வினுள், சிறியளவான ஒரு திடீர் ஊடுருவற் தாக்குதலைப் புலிகள் நடாத்தினர்.

2 அல்லது 3 யுத்த 'ராங்க்'குகளைச் சேதப்படுத்தியதுடன், ஜி.பி.எம்.ஜி., எல்.எம்.ஜிகள் உட்பட 12 ரைஃபிள்களைக் கைப்பற்றினர்.

இந்தச் சண்டையை அடுத்து மறுநாள் எதுவித நகர்வையும் மேற்கொள்ளாது அமைதியாக இருந்த எதிரி– அதற்கடுத்த நாள் வேறொரு புதுவழி மூலம் நகரத் தயாராகிக்கொண்டிருந்தபோது–

5 ஆம் நாள் – 26 ஆம் திகதி வியாழக்கிழமை – 'சத்ஜய' துருப்புக்களுக்கு அழிவுக்குரிய நாளாகவே விடிந்தது.

அன்றுதான் பேரழிவு மிக்க அந்தப் பெருந் தாக்குதலை அவர்கள் எதிர்கொண்டனர்.

உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரிக்கருகில் நிலைகொண்டிருந்த 'சத்ஜய' துருப்புக்களின் முன்னணிப் பகுதிக்குள் மூன்று முனைகளில் ஊடறுத்து நுழைந்த புலிகள், எதிரிக்கு மரண அடியைக் கொடுத்தனர்; அந்த முன்னரங்க நிலைகளில் நிறுத்தப்பட்டிருந்த சிறப்புக் 'கொமாண்டோ'ப் படையணிகளைச் சிதறடித்தனர்.

காலை 5.30 மணியிலிருந்து 3 மணிநேரம் அந்த உக்கிரமான அதிரடித் தாக்குதலைப் புலிகள் நிகழ்த்தினர். வான்படையின் போர் விமானங்கள், 'ஆட்டிலறி'கள், யுத்த 'ராங்க்'குகள் மற்றும் கனரக - சிறுரக போர்க்கருவிகள் சகிதம் அந்தத் தாக்குதலை முறியடிக்கப் பகைவன் எடுத்த உச்சக்கட்ட முயற்சியை முறியடித்த புலிகள், தாக்குதலை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தபின்பு களத்திலிருந்து வெளியேறினர்.

குறைந்தது 200 வரையான சிங்களச் சிப்பாய்கள் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்பது உறுதியானது. 190 படையினர் கொல்லப்பட்டதாக சண்டே ரைம்ஸ் தனது 29.09.96 ஆம் திகதிய இதழிலும், 206 படையினர் கொல்லப்பட்டதாக மிட்வீக் மிறர் தனது 16.10.96 இதழிலும் குறிப்பிட்டுள்ளன. 32 ஆயுத கருவிகளைப் புலிகள் கைப்பற்றினர். புலிகளின் 42 வீரர்கள் அந்தக் களத்தில் வீழ்ந்தனர். கரும்புலிகளின் அணியெதுவும் தாக்குதலில் பங்கேற்கவில்லை. ஆனால், சிங்கள அரசு, தாக்குதலைத் தாம் முறியடித்ததாகவும், அதில் புலிகளின் தற்கொலைப் படையினர் உட்பட 450 புலிகள் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 136 பேரின் சடலங்களைத் தாம் மீட்டுள்ளதாகவும் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்களைச் செய்தது. எனினும், இந்தத் தாக்குதலின்போது எமது 17 மாவீரர்களின் உடல்கள், களத்திலிருந்து மீட்டுவரப்பட முடியாமல் விடுபட்டுவிட்டன என்பது உண்மையாகும். களப்பிரதேசத்தில் ஆங்காங்கே வயல் வெளிகளிலும், வீதியோரங்களிலும் தாம் பொறுக்கியெடுதத 100 வரையான புலிகளின் உடல்களை ஒப்படைப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்மூலம் அரசு அறிவித்தது. எமது மாவீரர்களின் உடல்களைப்பெறுவதற்குச் சம்மதம் தெரிவிதுக் காத்திருந்தபோதும், பின்னர் உடல்களை அரசு வழங்கவில்லை.

6ஆம் நாள்–சண்டையின் பிரதானமையமும், புலிகளின் கணிசமான சண்டையணிகளும் உருத்திரபுரம் பகுதியில் நிலைகொண்டிருந்தவேளை –

திடீரென, அதிகாலையில், பரந்தன் முன்னணி நிலைகளிலிருந்து கரடிப் போக்குச் சந்தியை நோக்கி, பிரதான வீதிக்கு மேற்குக் கரையால் நகர முற்பட்ட பகைவனை –

ஏற்கெனவே அரண் செய்யப்பட்டிருந்த காப்பான நிலைகளிலிருந்து உக்கிர எதிர்த் தாக்குதலை நிகழ்த்திய புலிகள், பலத்த இழப்பைக் கொடுத்து வழிமறித்து நிறுததினர்.

7 ஆம் நாள் – மீண்டும் உருத்திரபுரப் பகுதியிலிருந்து, ஜெயந்திநகரூடாக நகர்ந்த துருப்புக்களமீது, குருகுலத்திற்கு அருகில் புலிகள் ஒரு அதிரடியைக் கொடுத்தனர். யுத்த 'ராங்க்' ஒன்று முழுமையாக அழிக்கப்பட்டது.

8 ஆம் நாள் – குருகுலப் பகுதியிலிருந்து திருநகரூடாக ஒரு அணியும், பரந்தனிலிருந்து இன்னொரு அணியும் கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தபோது –

திருநகரூடாக நகர்ந்த அணி கிளிநொச்சி மருத்துவமனையையும், பரந்தனிலிருந்து நகர்ந்த அணி கரடிப்போக்கு புனித திரேசா கல்லூரியையும் அடைந்தன. இந்தச் சண்டைகளில் 2 ரைஃபிள்கள் கைப்பற்றப்பட்டன.

9 ஆம் நாள் – 'சத்ஜய' 3 ஆம் கட்டத்தின் இறுதி நாள் – புரட்டாதி 30 ஆம் திகதி, ஜெயந்திநகர், பகுதியிலிருந்து தென்திசையால் நகர்ந்த அணி, அம்பாள்குளம் சந்தியூடாக வளைந்து, டிப்போ வீதிவழியாக பிரதான வீதியை அடைந்தது.

சத்ஜய படையெடுப்பின் 3 ஆம் கட்டம் முடிவடைந்துவிட்டது.

இப்போது – ஆனையிறவுத் தளத்திலிருந்து, கிளிநொச்சி மத்திய கல்லூரிவரை, பிரதான வீதியை மையப்படுத்தி 3½ கிலோ மீற்றர் அகலத்தில் சிங்களப் படைகள் நிலைகொண்டுள்ளன.

'சத்ஜய' 3 ஆம் கட்டச் சமரில் தனது 269 படையினர் உயிரிழந்ததாக, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் கூறுகிறது. எனினும், களத்திலிருந்து கிடைத்த செய்திகள், 500இற்கும் குறையாத படையினர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. ''சத்ஜய'வில் உயிரிழந்த படையினரின் தொகையை அரசு அரைப்பங்காகக் குறைத்தே வெளிப்படுத்தியது'' என்று திரு. ரணில் விக்கிரமசிங்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திலும், ''கொழும்பு மாவட்டத்திற்கு மட்டும் 300 படையினரின் சடலங்கள் வந்தன – ஏனைய மாவட்டங்களிற்கு எத்தனை வந்தனவோ தெரியாது'' என கொழும்பு மாவட்ட உறுப்பினர் அல்ஹாஜ் எம். எச். முகமட், நாடாளுமன்ற உரையிலும் தெரிவித்திருப்பது இங்கு கவனத்திற்குரியதாகின்றது. 'சத்ஜய' 3 ஆம் கட்டச் சமரில் எமது 133 வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

கிளிநொச்சிச் சமரின் போரியல் பரிமாணம் வித்தியாசமானது; வழமையைவிட மாறுபட்டது; தமிழீழப் போரின் புதிய கட்டமொன்றைப் புலப்படுத்துவது. தனது யுத்த சரித்திரததில் முதற்தடவையாக விடுதலைப் புலிகளின் படைத்துறையானது, மரபுவழிச் சமர் ஒன்றை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் – 'றிவிரச' படையெடுப்புக்கு எதிரான சமரை விடவும், 'சத்ஜய' படையெடுப்புக்கு எதிரான சமர் முன்னேற்றகரமானது என்று சொல்லலாம். முன்னைய சமர்களில் கிடைத்த அனுபவங்களும், புலிகள் புதிதாகக் களத்திலிறக்கிய போராயுதங்களும் இந்த மேம்பாட்டில் பங்கு வகிக்கின்றன. புலிகளின் கைகளிற்கு 120 மில்லி மீற்றர் மோட்டார்களினதும் மற்றும் பெயர் குறிப்பிட முடியாத சுடுகருவிகளினதும் வருகை, மரபுவழிச் சமர் முறையை எதிரிக்கு முதற்தடவையாக சிக்கலுக்குரிய தாக்கியுள்ளதுடன், மரபுவழிச் சமரொன்றைச் சந்திக்கவல்ல போர்த்திறனின் ஆரம்பக்கட்டத்தைப் புலிகளுக்கும் வழங்கியுள்ளது.

'சத்ஜய'வின் 2 ஆம் கட்டமும் 3ஆம் கட்டமும், புலிகளது போர்வலுவின் இருவேறு பரிமாணங்களைக் காட்டுகின்றன.

நிலத்தை இழந்துவிடாமல் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடனும், அதற்காக எத்தகைய உயிர் விலையைக் கொடுக்கவும் தயாரான நிலையுடனும் இருந்தால், படையெடுப்பு நடவடிக்கை யொன்றை முழுமையாகத் தடுத்து முறியடிக்கலாம் என்பதற்கு, 2 ஆம் கட்டச் சமர் சான்று.

ஆட்பலத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காகத தந்திரோபாயப் பின்வாங்கலொன்றைச் செய்யவேண்டியிருந்து, ஆனால் அதற்காக, நிலத்தைத் தற்காலிகமாக இழக்க – விட்டுக் கொடுக்க – நேர்ந்தாலும்கூட, படையெடுப்பு நடவடிக்கை ஒன்றை எதிர்கொண்டு மோதி, குறைந்த சேதத்துடன் எதிரிக்கு மிகக் கூடிய அழிவைக் கொடுக்கமுடியும் என்பதற்கு, 'சத்ஜய'வின் 3 ஆம் கட்டச் சமர் சான்று.

கெரில்லாப் போருபாய யுத்த முறையில் புலிகள் பெற்றுவிட்ட பூரணப்பட்ட வளர்ச்சி நிலைக்கு, முல்லைத்தீவுத் தாக்குதல் ஒரு குறியீடு. மரபுவழி யுத்தமுறையில் ஈடுபட புலிகள் பெற்றுள்ள புதிய போர் வலுவுக்கு, கிளிநொச்சிச் சமர் ஒரு அடையாளம்; இதனை – தமிழீழ யுத்தக்களத்தில் வருங்காலத்தில் நிகழப்போகும் பெரும் மாற்றங்களின் எதிர்வுகூறல என்றுதான் சொல்லவேண்டும் !

– தி. இனியவன் ○







www.eelamview.com

www.eelamview.com



# நந்திக்கட லோரம் முந்தைத்தமிழ் வீரம் வந்துநின்று ஆடியது நேற்று!



சிங்கள ஆதிக்கத்தின் சிம்மாசனத்திற்கு என்னபெயர் ?
''சந்திரிகா அரசு.''

வேரறுத்து தமிழினத்தை விழுத்தி
கொளுத்தியெரிப்பவர்களுக்குத் தளபதி யார்?
''அனுருத்த ரத்வத்த.''

துரோகத்தின் உச்சத்துக்கு சமகால உதாரணம் சொல்க.
''லக்ஷ்மன் கதிர்காமர்.''

கையிலுள்ள எலும்புத் துண்டுக்காக
காலைச்சுற்றிவரும் அவமானத்துக்கு
மனிதப் பெயரென்ன?
''டக்ளஸ் தேவானந்தா''

கடல்வற்றக் காத்திருந்து
குடல்வற்றிச் செத்த கொக்குக்கு
புதிய உவமை கூறுக.
''நீலன் திருச்செல்வம்.''

நாளையெம் தலைமுறையின்
இன்றைய வரலாற்றுப் பொதுஅறிவுப் போட்டிக்கு
இதுவே கேள்வியும் பதிலும்.

என்னபாவம் செய்தது ஈழத்தமிழினம்?
கண்ணீரோடு இன்னும் எத்தனைகாலத்தைக் கழிக்குமோ?

மூச்சை ஆசுவாசப்படுத்த முடியாத துயரப் பயணத்தில்
தமிழீழம்; தேற்ற ஒருவரற்ற தேசமா ?
உயிர்மூட்டையான உடலில் உரப்பைமூட்டையைச் சுமந்தபடி
பகலில் மரத்தின் கீழும்;
இரவில் மதவின் கீழும்
வாழும் எச்சில்வரலாறு எவன் கொடுத்தது ?

ஈழத்தமிழனுக்கு இந்தவிதியை எழுதியவன் யார் ?
கடவுளா ?
அவன் கடவுளெனினும் கழுவிலேற்று.

இப்போது மழைகாலம்
ஊரின் முகடுபிரிந்து ஒழுகுகிறது.

சூரியன் எரிக்கிறது,
மாரிமழை நனைக்கிறது,
கூதற்காற்றோ கொடுகுகிறது,
நுளம்புக்கும் தமிழன் குருதியே குழம்பு
ருசித்துப் புசிக்கிறது.

வானக்கூரையின் கீழே ஈழத்தமிழரெல்லாம்
சபிக்கப்பட்ட பாவமக்களாக......

இங்குமங்குமாக எங்கெங்கோ அலைந்துவிட்டு
மரத்தடியையே மாளிகையாக்கி
இப்போ தூளிகட்டிக் கொண்டனர்.

அதற்குள்ளே ஆனந்தமாகத் துயில்கிறது
ஏதுமறியாத எம்மினத்தின் குருத்து.

## உலைக்களம்

– வியாசன்

சந்திரிகா அரசு தமிழரின் வாழ்வை
கொத்திக் குதறிச் சடலமென வளர்த்தியபோது
எழுந்த ஒப்பாரிகளும், கூக்குரல்களும்
இன்று வெந்துதணிந்து வெறும் முனகல்களாகி விட்டன.

ஐயோ பாவமெனச் சொல்லிய பல்லிகளும்
வாயடங்கி மௌனித்துவிட்டன.

உலகத்துக்கும் பல சோலிகள்
ஈழத்தமிழனைப் பார்க்க எங்கே நேரம் ?
தன்னைத்தானே சுற்றியபடி
சூரியனையுமல்லவா சுற்றிவரவேண்டும் ?

அழுகின்ற தமிழனுக்கு ஆறுதல்சொல்ல முடியாது
பூமியும் பேசாமற் சாமியிடம் விட்டுவிட்டது.

சாமியும் இப்போது ஆமியிடம் கொடுத்துவிட்டு
பன்றிக்குப் பால்கொடுக்கப் போய்விட்டார்.

தாயுமானவருக்கும் தமிழரைப்பார்க்க நேரமில்லை
ஓய்வுதேடி உறக்கத்தில் கிடக்கின்றார்.
கவிஞர்களின் பேனாக்களும் களைத்துப்போய்விட்டன.
எத்தனை கவிதைகளைத்தான் எழுதுவது ?

மூக்கிலும் விழிகளிலும் ஒழுகும் வெண்ணீரை
எத்தனை வரிகளிற்தான் ஒத்தியெடுப்பது ?
கவிஞர்களும் கண்ணயர்ந்துவிட்டனர்.

ஈழத்தமிழன் வாழும்தமிழனாக
இன்றுவரை இல்லை.

என்கையிற்பிள்ளை எனக்கே அடைக்கலமென்று
தமிழர்களை அவலமே தத்தெடுத்துவிட்டது.

துன்பத்தில் திரிபோட்டு கண்ணீரே விளக்கெரிக்கிறது.

ஈழத்தமிழனின் பேரிற்தான் எத்தனை வியாபாரம்?

நாடாளுமன்றுக் கதிரைகளில் சில பச்சோந்திகள்.

இடைக்கால அரசை எம்மிடம் தாருங்களென்று
படைநடத்தப் புறப்பட்ட சில பழைய '' தளபதிகள். ''

'' வெள்ளைவான் '' வெறியர்களாகச் சிலர்.

தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மைகளாக இன்னும்சிலர்.

போராட்டம் சிலருக்கு பெரிய வியாபாரமானது.

நெருப்பெரியும் நிலமாகத் தாயகம்,
தெருத் தெருவாக உறவுகள்,
கல்லறைகளுக்குள்ளே வல்லமைகள்.
இப்படி எத்தனைவிதமான விலைகொடுப்பு.

விடுதலை உயிர்ப்பின் வேரின்அடியில்
உயிரையே உரமாக்கும் ஈகத்துடன் புலிகள்.

கண்ணீரைச் சுமக்கும் விழிகளெனினும்
உள்ளேபார் தீயின்நாக்குகள் சுடர்கின்றன.

சொல்பகையே !
ஊரூராக எம் உறவுகளைக் கலைக்கின்றாய்
கலைத்துவிடு.

அகதியென்று உலகத்திசையெங்கும்
தமிழனை அவதியுறக் கலைக்கின்றாய்
கலைத்துவிடு.

உறக்கத்தில் கிடக்குமா எம்மினம்?

பக்கவிளைவைப் பார்......உனக்கது அச்சமூட்டும்.

மட்டக்களப்பிலிருந்து......
திருகோணமலையிலிருந்து —....
மன்னாரிலிருந்து...
யாழ்ப்பாணத்திலிருந்து .. ..
இன்று வன்னியிலிருந்து ... கலைக்கின்றாய்
கலைத்துவிடு.

ஈழத்தமிழனின் இளைய தலைமுறைக்கு
கோபம் கொப்பளிக்கட்டும்.

வாழும் உரிமையைப் பறித்தாயே பாவி என்று
தேகம் கொதிக்கட்டும்.

போராடி என்னூர் புகுவேன் என
நம்பிக்கை உதிக்கட்டும்.

இலவம்பஞ்சுவெடிப்பது இனத்தை விருத்திசெய்யவே.
மரங்கள் விதையுதிர்ப்பது புதிய தளிர்களுக்காகவே.

பகையே சொல் !
ஈழத்தமிழனை என்னசெய்யப் போகிறாய்?
கூழாகக் காய்ச்சிக் குடிக்கவாபோகிறாய்?
குடித்து முடி.
வயிறு வெடித்துக் கிடப்பாய்.

உனக்கு அழிவில்லையென்றா வரம்பெற்றாய்?
எம் இளையதலைமுறை ''நரசிம்ம அவதாரம்'' எடுத்துளது.

சந்ததியின் சக்தி வலுப்பெற்று வருகிறது.
முல்லைத்தீவு...... அதற்கு முன்னுதாரணம்.

நந்திக்கட லோரம் முந்தைத்தமிழ் வீரம்
வந்துநின்று ஆடியது நேற்று –
தந்தனத்தோம் தா தெய் என்றுநடமாடி
இங்குவந்து வீசுறது காற்று.



www.eelamview.com

# 'சத்ஜய'வும் 'றிவிரச'வும்; 'ஓயாத அலைகளு'ம் 'தவளை'யும்!

மூன்று கட்டங்களாக சிங்கள அரசு நடாத்திய 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் விளைவாக – கிளிநொச்சி நகர் உள்ளிட்ட – 60 ச. கி. மீற்றர் நிலத்தில், சிங்களப் படைகள் நிலைகொண்டுள்ளன.

அத்துடன், படையினர் கைப்பற்றிய நிலப்பகுதியைச் சூழவுள்ள, மேலும் 100 ச. கி. மீற்றர் நிலப்பரப்பு, மக்கள் வாழாத – வாழ்வதற்கு அஞ்சும் – பகுதிகளாக மாறிவிட்டன.

மொத்தத்தில், குடிசன அடர்த்தியையும் விளைநில வளங்களையும் உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்டத்தின் 150 ச. கி. மீற்றர் நிலத்தை, சத்ஜய ஆக்கிரமித்துள்ளது.

இந்த நிலப்பரப்பில் இருந்து, சுமார் 1½ இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் கணிசமானோர் யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்து – வதிவிடங்களை அமைத்து வாழ்ந்த மக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுத் தளத்தின் (முன்னைய) முன்னணிக் காவலரண்கள் அமைந்திருந்த உப்பளம் மற்றும் தட்டுவன்கொட்டிப் பகுதிகளில் 26. 7. 96 அன்று ஆரம்பித்த சத்ஜய–1 சண்டை முனையிலிருந்து – இப்போது – சத்ஜய படையினர் நிலைகொண்டுள்ள (கிளிநொச்சி) டிப்போச் சந்திவரையான தூரம், 12 கி. மீ. நீளம் ஆகும்; இதன் அகலம் 3½ கி. மீற்றர்.

சத்ஜய சமர் ஆரம்பிக்கு முன்னரே, பரந்தன் சந்திவரையான நிலப்பகுதி, மக்கள் வாழாத பகுதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1279 ச. கி. மீற்றர் பரப்பளவை உடைய கிளிநொச்சி மாவட்டத்திலேயே, ஆனையிறவுப் படைத்தளம் அமைந்திருக்கின்றது.

கிளிநொச்சி நகர்ப்பகுதியையும் கைப்பற்றி ஆனையிறவுடன் இணைத்ததன்மூலம் இப்போது, இம்மாவட்டத்தின் மேலும் 60 ச. கி. மீற்றர் நிலப்பரப்பு, படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் வீழ்ந்துவிட்டது.

''சத்ஜய சமரில் 269 படையினர் பலியாகினர்; 311 பேர் காயமடைந்தனர்'' என அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

''**கிளிநொச்சி சண்டையில் காயமடைந்த படையினருக்குச் சிகிச்சை செய்ய இரத்ததானம் செய்யுங்கள்**'' என, சிங்கள மக்களிடம், சிறீலங்கா ஜனாதிபதி அவசர வேண்டுகோள் விடுத்திருந்தார். அத்துடன், '**வழமையான சத்திரசிகிச்சைகளை தற்காலிகமாக நிறுத்திவைத்துவிட்டு படையினருக்கு சிகிச்சை அளிப்பதாக**' கொழும்பு பிரதான வைத்தியசாலை நிருவாகம் அறிவித்தமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அரசு சொல்லியிருப்பதுபோல 311 படையினருக்குச் சிகிச்சை அளிக்க இத்தனை தடபுடல்களும் தேவையா?

சிங்கள தேசத்தின் தலைமையும் – அதன் பிரதான வைத்தியசாலையின் நிருவாகமும் நெருக்கடியைச் சந்திக்கும் அளவுக்கு, சத்ஜய சமரில், பெருந்தொகைப் படையினர் காயப்பட்டுவிட்டனர் என்பதே உண்மையாகும்.

''**இழப்புக்களை அரசு அரைப்பங்காகக் குறைத்து வெளியிடுகிறது**'' என, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டியுள்ளதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது.

மூன்று கட்டங்களாக நடந்த சத்ஜய சமரில், சுமார் 700 படையினர் கொல்லப்பட்டுவிட்டனர்; ஏறக்குறைய 2500 படையினர் காயமடைந்துவிட்டனர் என்பதே உண்மையாகும்.

இரண்டு 'பிரிகேட்'டுகள் 'சத்ஜய' சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, முன்னர் அரசு கூறியிருந்தது. ஆயினும், பின்னர் மேலும் ஒரு 'பிரிகேட்' சண்டைமுனைக்கு அனுப்பப்பட்டதாக அரசு அறிவித்திருந்தது. காயமடைந்து அல்லது கொல்லப்பட்டதால் களத்திலிருந்து அகற்றப்பட்ட படையினருக்குப் பதிலாகவே, புதிய 'பிரிகேட்' சமர்முனைக்கு அனுப்பப்பட்டது என்ற கள யதார்த்தத்தை, எவரும் மறுக்க முடியாது. ஒரு 'பிரிகேட்' என்பது சிங்கள இராணுவ நடைமுறையில், 4500 இலிருந்து 5000 ஆட்தொகையைக் கொண்டதாகும்.

இதேவேளை, மூன்று கட்ட சத்ஜய சண்டைகளிலும் 254 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

சத்ஜய சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தவரையில், நிலத்தைக் கைப்பற்றிய விடயத்தில் சிங்களப் படை வெற்றியைப் பெற்றுள்ளது; ஆனால், இதற்காக அரசுப் படைகள் செலுத்திய விலையைக் கருத்தில் எடுத்தால், அதை, புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும். 700 படையினரை இழந்து – 2000 படையினர் காயப்பட்டதுடன், பாரிய தொகைப் படைக்கல சக்தியையும் [ குண்டு + எறிகணைகள் ] அரசுப் படைகள் செலவிட்டுள்ளன.

இந்த வகையில், சத்ஜய சமரின்போது சிங்களப் படைகள் கொடுத்த உயிர் விலைக்கும் – செலவிட்ட படைக்கலங்களுக்கும் இணையாக புலிகள் தரப்பில் இழப்புகளை ஏற்படுத்த, அரசுப் படைகளால் முடியவில்லை. ''புலிகள் தரப்பில் 1000 பேரைக் கொன்று 3000 பேரைக் காயப்படுத்தியதாக'' அரசு பிரச்சாரம் செய்தது. சத்ஜய சமருக்காக சிங்களப் படைகள் செலுத்திய விலைக்கு இணையாக, புலிகள் தரப்பில் எவ்வளவு ஆள் இழப்பு இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற சிங்களத் தளபதிகளின் கணிப்பே, 1000 உம் 3000 உம் என்ற சிங்கள அரசின் பிரச்சாரமாகும்.



குறைந்த எண்ணிக்கையான இழப்புடன் கூடிய எண்ணிக்கையான இழப்பை படையினருக்கு வழங்கிய செயலை, 'சத்ஜய சமரில்' புலிகள் பெற்ற ஒரு இராணுவ வெற்றியாகக் கொள்ளமுடியும்.

இதேவேளை, மக்கள் நெருக்கமாக வாழ்ந்த கிளிநொச்சியின் 60 ச. கி. மீற்றர் நிலத்தை சிங்களப் படை கைப்பற்றியதால், அங்கு வாழ்ந்த மக்கள் பெருந்துன்பத்தைச் சந்தித்துள்ளனர்; இவர்களது அன்றாட வாழ்க்கை பேரிடருக்குள்ளாகியுள்ளது. எனினும், பரந்த வன்னிப் பெருநிலத்தில் 60 ச. கி. மீற்றர் நிலத்தைச் சிங்களப் படை தனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்த செயல், புலிகள் இயக்கத்திற்கு எந்த ஒரு இராணுவப் பின்னடைவையோ அல்லது அரசியல் நெருக்கடியையோ வழங்கவில்லை.

இச் சத்ஜய சமரின் இராணுவ நோக்கங்களில் ஒன்று, புலிகளைச் சமருக்கு இழுத்து – இயன்றவரை அழிப்பது என்று அரசு கூறியிருந்தது. அத்துடன், கிளிநொச்சியைப் பிடிப்பதன்மூலம் புலிகளின் பின்தளமான வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளுக்கு ஒரு இராணுவ அச்சுறுத்தலைக் கொடுப்பதுடன், அங்கே தனது இராணுவ மேல்நிலையைக் காட்டுவது என்பதும் சத்ஜயவின் இன்னொரு இராணுவ நோக்கமாகும்.

இதில் முதலாவது இராணுவ நோக்கம் ஈடேறவில்லை. கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதும் அதன் இரண்டாவது இராணுவ நோக்கம் நிறைவேறிவிடும் என்று முரசறைந்திருப்பது, முட்டாள்தனமானதாகும்.

சத்ஜயவின் அரசியல் நோக்கங்களில் ஒன்று, முல்லைத்தீவுத் தோல்வியை கிளிநொச்சியைக் கைப்பற்றி ஈடுகட்டுவது; அடுத்தது, புலிகளின் தற்போதைய நிர்வாக மையமான கிளிநொச்சியைக் கைப்பற்றிப் புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது.

முதலாவது அரசியல் நோக்கம் – சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை – ஈடேறி இருக்கலாம்; ஆனால், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு இது, எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது. நிர்வாக அலகுகள் இயங்கிய கட்டடங்களை அல்லது இடங்களைக் கைப்பற்றுவது என்பது, புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புகளைக் கைப்பற்றுவது என்றோ அல்லது அதை அழித்தொழிப்பது என்றோ அர்த்தமாகாது.

அத்துடன், பூகோளரீதியில் 'காட்டையும்'



'சத்ஜய' படைமெடுப்பின்போது தம்மால் தாக்கியழிக்கப்பட்ட 'ராங்க்'குடன், புலிகளின் பெண் போராளிகள்.





www.eelamview.com

www.eelamview.com



காடுசார்ந்த இடங்களையும் பிரத்தியேக இயல்பாகக்கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பை, புலிகள் இயக்கம் தனது பின்தளமாக மாற்றிக்கொண்டுவிட்ட இன்றைய சூழலில், புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது என்ற அரசின் பிரச்சாரம் அல்லது அரசியல் நோக்கம் நகைப்பிற்கு இடமாக உள்ளது அல்லவா !

60 ச. கி. மீற்றர் பரப்பளவை படையினர் புதிதாகக் கைப்பற்றிவிட்டனர் என்பது, தமிழினத்திற்குக் கவலைதரும் விடயம்தான். ஆனால், இந்த நிலப்பரப்புக்குப் பதிலாக, 30 ச. கி. மீற்றர் நிலப்பரப்பை விழுங்கி வைத்திருந்த பூநகரித் தளத்தை அகற்றவேண்டிய தேவை அரசிற்கு எழுந்துவிட்டதை, நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

புதிதாக ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றி– வைத்திருக்க வேண்டுமாயின, பழைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிலவற்றைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் அரசுப் படைக்கு இன்றும் இருக்கின்றது– இனியும் இருக்கும் என்பதே, இராணுவ யதார்த்தம் ஆகும். குடாநாட்டைக் கைப்பற்றி வைத்திருக்க கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியைக் கைவிட வேண்டியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**''வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இராணுவத்தினருக்கு நான் எங்கே செல்வது......? கிழக்கில் இருந்து துருப்புகளை எடுக்க நான் தயங்கமாட்டேன்''** என்று, அண்மையில் ரத்வத்த குரலெழுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.


முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அழித்ததன்மூலம் புலிகள் இயக்கம் பெற்ற இராணுவ வெற்றி, கிளிநொச்சியை இழந்ததால் அர்த்தமற்றுப்போய்விட்டதல்லவா எனச் சிலர் கேள்வி எழுப்பக்கூடும்.

முல்லைத் தளம்மீதான தாக்குதலையும் சத்ஜய சமரையும் ஒரே இராணுவத் தராசில் வைத்து எடைபோட்டுத் தீர்ப்புக்கூற முனைவது, ஒரு இராணுவத் தவறு ஆகும்.

முல்லைத் தளம் மீதான தாக்குதலின் இராணுவ பரிமாணம் வேறு; சத்ஜய சமரின் இராணுவ பரிமாணம் வேறு.

முல்லைத்தீவுத் தாக்குதல், கெரில்லாப்போர் உபாயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாரிய திடீர்த் தாக்குதல்.

இத் திடீர்த் தாக்குதலை புலிகள் இயக்கமே நடாத்தியது.




'சத்ஜய' நடவடிக்கைகளின் பின் படைகள் நிலைகொண்டுள்ள பிரதேசம்

அதுபோல முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலை இராணுவ ரீதியில் ஒப்பிடவிரும்புவோர் அதை, பூநகரித் தளம் மீதான தாக்குதலுடன் ஒப்பிட்டு – அவற்றின் இராணுவ பரிமாணங்களை ஆய்வு செய்து பார்க்கலாம்.

''ரிவிரசவின் வெற்றிக்குப் பிரதான காரணமாக 'ஆட்டிலறி'ப் பலத்தையே நான் சொல்வேன்'' என, முன்னாள் இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா கூறியிருந்தார். 'ரிவிரச'வில் மட்டுமல்ல, சத்ஜயவிலும் எறிகணை – குண்டுப்பிரயோகம் பிரமாண்டமான அளவில் பயன்படுத்தப்பட்டது.

'ரிவிரச – 1' அதாவது வலிகாமச் சமர், 50 நாட்கள் நடந்தது. அந்த ஐம்பது நாள் சமரில், தொண்ணூறாயிரம் ( 90,000 ) எறிகணைகளை அரசுப் படைகள், பயன்படுத்தியிருந்தன என, சிறிலங்காச் செய்திகள் தெரிவித்துள்ளன.

எனவே, நாளொன்றுக்கு 1800 எறிகணைகள் என்ற வீதத்தில், புலிகள்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வலிகாமச் சமரில் 494 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்; படையினர் தரப்பில் 750 பேர்வரையில் பலியாகியுள்ளனர்

இது ஒருபுறமிருக்க–

சத்ஜய சமரின் இரண்டாம் கட்டமும் மூன்றாம் கட்டமும் தீவிர சண்டைகளைக் கொண்டமைந்திருந்தன.

04. 08. 96 அன்று தொடங்கிய 'சத்ஜய – 2' நான்கு நாட்கள் தீவிரமாக நடந்தது.

22. 09. 96 அன்று தொடங்கிய 'சத்ஜய – 3' பத்து நாட்கள் தீவிரமாக நடந்தது.

26. 07. 96 அன்று தொடங்கிய 'சத்ஜய – 1' ஒரு நாள் மட்டுமே தீவிரமாக நடந்தது.

மொத்தத்தில் 'சத்ஜய' சமர் 15 நாட்கள் தீவிரமான முறையில் நடந்தது எனலாம். இந்தப் 15 நாள் சமரில் மட்டும் சுமார் 50,000 ( ஐம்பதாயிரம் ) எறிகணைகளை அரசுப் படைகள் பயன்படுத்தின எனக் கணிப்பிடக்கூடியதாக உள்ளது.

அதாவது, நாளொன்றிற்கு மூவாயிரம் ( 3,000 ) எறிகணைகள் என்ற வீதத்தில் புலிவீரர்கள்மீது ஏவப்பட்டுள்ளன ( 'ரிவிரச'வில் நாளொன்றுக்கு 1800 ).

இது ஒரு கற்பனைக் கணக்கு என்று எவரும் கருதிவிடக்கூடாது. உதாரணத்திற்கு, 26. 09. 96 அன்று அதிகாலை நடந்த சண்டையின் தன்மைபற்றி இங்கு பார்ப்போம்.

தியாகி திலீபனின் நினைவுநாளான அன்று, உருத்திரபுரத்தில் நிலைகொண்டிருந்த படையினர்மீது புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தி – 200 இற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றனர் என்பது, முன்னர் வெளிவந்த செய்தி.

***முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அழித்ததன்மூலம் புலிகள் இயக்கம் பெற்ற இராணுவ வெற்றி, கிளிநொச்சியை இழந்ததால் அர்த்தமற்றுப்போய்விட்டதல்லவா எனச் சிலர் கேள்வி எழுப்பக்கூடும்.***

தாக்குதல் திட்டம் தீட்டி– இரகசியமான முறையில் படைபலத்தை ஒருங்குதிரட்டி – திட்டத்திற்கேற்ப பயிற்சி அளித்து – தாக்குதலுக்கான நாள், நேரம் குறித்து – சிங்களப் படை நிலைமீது நடாத்தப்பட்ட ஒரு வலிந்த தாக்குதலே ( Offence ) முல்லைத் தளம் மீதான தாக்குதல் ஆகும்.

ஆனால், சத்ஜய சமர் அப்படியானதல்ல.

இச்சமருக்கான போர்த்திட்டத்தை சிங்களத் தளபதிகள் வரைந்தனர்– படையினருக்குப் பயிற்சி கொடுத்தனர் – தாக்குதலுக்கான நாளும், நேரமும், நகரும் திசையும் குறித்தனர். இவ்விதம் தமிழர் படையின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த ஒருபகுதிமீது, மரபுவழிப் போர்முறையில் படையினர் நடாத்திய ஒரு வலிந்த தாக்குதலே சத்ஜய சமர் ஆகும்.

புலிகள் இயக்கத்திடமிருந்த மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும்– பலத்தையும் அடிப்படையாக வைத்து, முல்லைத் தளம் மீதான தாக்குதலைத் தலைவர் பிரபாகரன் திட்டமிட்டு நடாத்தியிருந்தார். இத்தாக்குதல் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் புலிகள் வென்றுவிட்டனர்.

'சத்ஜய' ஒரு மரபுவழிச் சமர். ஆட்தொகையும் – ஆயுத பலமும் – படைக்கல சக்தி வளமும் இந்தவகைப் போர்முறையின் முதுகெலும்பு. சிங்களப் படையின் இந்த முதுகெலும்பு சற்றுப் பலமானது. இந்தப் பலத்தை அடித்தளமாக வைத்து, சத்ஜய சமரை ரத்வத்த திட்டமிட்டார். கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதுடன் புலிகளுக்கு பாரிய ஆள் இழப்பை உண்டுபண்ண வேண்டும் என்பதும், ரத்வத்தவின் பிரதான இலக்குகளாக இருந்தன. இதில் ஒன்று ஈடேறியுள்ளது; மற்றையது நடைபெறவில்லை. சத்ஜய சமரில் ரத்வத்தவுக்கு பாதிவெற்றிதான்.

சத்ஜய சமரை இராணுவ ரீதியில் ஒப்பிட விரும்புவோர் 'ரிவிரச' சமருடன் இதை இணைத்துப் பார்க்கலாம்.

அதாவது, ஒரு மரபுவழிச் சமரை– அதே இராணுவ பரிமாணத்தை உடைய – இன்னொரு மரபுவழிச் சமருடனேயே ஒப்பீடு செய்து பார்க்கவேண்டும். அதுபோல, இராணுவத் தளம் மீதான ஒரு பெருந்தாக்குதலை, இன்னொரு தளம்மீதான பெருந்தாக்குதலுடன் ஒப்பிட்டு இராணுவ மதிப்பாய்வுகளைச் செய்வதே – இராணுவ ரீதியில் – சரியானதாகும்.

'ரிவிரச'வைப் போலவே சத்ஜயவும் மூன்று கட்டங்களாக நடாத்தப்பட்டுள்ளது.

புலிகளின் அந்த அதிரடித் தாக்குதல், அதிகாலை 5. 30 இலிருந்து 8. 30 வரை – மூன்று மணிநேரம் – நடைபெற்றது. புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்காக, அந்தவேளையில் படையினர் எறிகணைகளை அள்ளி விதைத்தனர். செக்கனுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட எறிகணைகள் என்ற வீதத்தில், அந்த மூன்று மணிநேரமும் எறிகணைவீச்சு இடம்பெற்றிருந்தது. அந்த மூன்றுமணி நேரத்தில் மட்டும், அரசுப் படைகள் 10,000 ( பத்தாயிரம் ) எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பர் என்று கணிக்க முடியும். மேலும், சண்டை தீவிரமாக நடைபெறாத மிகுதி 55 நாட்களும் – தற்பாதுகாப்புக்காக – எதிரி பல்லாயிரம் எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பான். ( இந்த எறிகணைகள் இந்த ஆய்வில் கையாளப்படவில்லை).



சத்ஜயவின் இரண்டாம் மூன்றாம் கட்டங்கள் தீவிர சண்டைகளைக் கொண்டிருந்தன. அதுபோல, 'ரிவிரச'வின் முதலாம் கட்டமான வலிகாமச் சமரை மட்டும், புலிகள் எதிர்கொண்டிருந்தனர்.



www.eelamview.com

www.eelamview.com





இவை ஒருபுறமிருக்க –

'றிவிரச'வில் சிங்கள வான்படை வீசிய குண்டுகளைவிட பல பத்துமடங்குகளை அவை, சத்ஜய சமரில் வீசியுள்ளன. 'கிபிர்' உந்துவிசைப் போர் விமானங்களின் முழுவீச்சான குண்டுவீச்சுத் தாக்குதலை, கிளிநொச்சிச் சமர்முனை அனுபவித்தது.

***சத்ஜய சமர்க்காலத்தில் கிபிர், புக்காரா வீமானங்கள் சுமார் 220 குண்டுவீச்சுப் பறப்புக்களைச் செய்தன; இதன்போது சுமார் 325 தொன் குண்டுகளை வீசின; சத்ஜயவில் ஏவப்பட்ட எறிகணைகளின மொத்த எடை சுமார் 500 தொன்கள். எனவே, 825 தொன் வெடிப்பொருள்களை சத்ஜய சமரில் எதிரி செலவிட்டுள்ளான்.***

ஆடி 26ஆம் திகதி சத்ஜய – 1 இலிருந்து சத்ஜய – 3 ஓய்வுக்குவந்த ஐப்பசி 2ஆம் நாள் வரையான சுமார் 65 நாட்கள், கிளிநொச்சியும் அதன் சுற்றுவட்டாரமும் 'இரும்புக் கழுகுகளின்' எச்சம்பட்டு அதிர்ந்தபடியிருந்தன!

சண்டை தீவிரமாக நடந்த 15 நாட்களும், நாளொன்றிற்கு நான்கு தடவைகள் என்ற விததில் பறந்துவந்த 'கிபிர்' விமானங்கள் குண்டு வீசிச் சென்றன. ஒரு தடவையின்போது, இரண்டு கிபிர் விமானங்கள் வந்து குண்டு விசுவது வழமை. இந்த வகையில் 120 குண்டு வீச்சுப் பறப்புக்களை அந்தப் 15 நாட்களிலும் 'கிபிர்' விமானங்கள் செய்துமுடித்துள்ளன.

இதைவிட, மற்றைய நாட்களில், நாளொன்றிற்கு இரண்டு தடவைகள் என்ற வீதத்தில் 'கிபர்' விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. சதஜயவின் இந்த 70 நாட்களில், சுமார் 10 அல்லது 15 நாட்கள் மட்டுமே குண்டுவீச்சு நடைபெறாத நாட்களாக அமைந்திருந்தமை குறிப்பிடததக்கது. எனவே, மிகுதி நாட்களில் கிபர் விமானங்கள் சுமார் 100 குண்டு வீச்சுப் பறப்புக்களை நடாத்தி உள்ளன எனக் கணிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் சத்ஜயவின் 65 நாட்களில், சுமார் 220 குண்டு வீச்சுப் பறப்புக்களை கிபர், புக்காரா விமானங்கள் செய்துள்ளன.

ஒரு கிபிர் அல்லது புக்காரா விமானம் ஒரு பறப்பின்போது, 1500 கிலோ நிறைகொண்ட குண்டுகளை எடுத்துச்சென்று வீசவல்லது. அவை 500 கிலோ கொண்ட மூன்று குண்டுகளாக அல்லது 250 கிலோ கொண்ட ஆறு அல்லது 125 கிலோ கொண்ட பன்னிரண்டாக இருக்கும்.

அப்படியாயின், 220 பறப்புக்களின்போதும் மொத்தம் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் கிலோ எடைகொண்ட குண்டுகளை அவை வீசிமுடித்தன. இது ஏறக்குறைய 325 தொன்கள் ஆகும்.

இதேவேளை, சத்ஜயவில் பயன்படுத்தப்பட்ட 50,000 எறிகணைகளின் எடையைப் பருமட்டாக மதிப்பிட்டால், அது ஏறக்குறைய 500 தொன் நிறையுடையது என்ற முடிவிற்கு வரமுடிகின்றது.

எனவே, இந்த 825 [ 500 + 325 ] தொன் வெடிப்பொருளை கிளிநொச்சிச் சமர் முனையில் எதிரிப்படை பயன்படுத்தியும்கூட, புலிகளின் தரப்பில் 254 போராளிகளைக் கொல்ல மட்டுந்தான் முடிந்தது. சத்ஜய சமரில் புலிவீரர்களுக்குக் கிடைத்த ஒரு அற்புதமான இராணுவ வெற்றியாக இதைக் கருதுவது தவறா?!

***நிலத்தைக் கைப்பற்றும் விடயத்தில் படையினர் பெறுகின்ற தற்காலிக வெற்றிகள், புலிகளின் பக்கமுள்ள பல இராணுவ அனுகூலங்களை மறைத்துவிடுகின்றன. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் பெருமளவு நிலங்களை ( நாடுகளை ) கைப்பற்றி வைத்திருந்த கிட்லரின் படைகளால் போரை வெல்ல முடியவில்லை. நிலங்களைக் கைப் பற்றும் பேராசையால் ஏற்பட்ட இராணுவத் தவறுகளினால், ஜேர்மன் படை போரில் தோற்றது. கிட்லரின் படைகள் படித்த அதே இராணுவப் பாடத்தைத்தான் ரத்வத்தவின் படைகளும் படிக்கப்போகின்றன...***

மேலும், எறிகணை மழையையும் – வெடிமருந்துப் புயலையும் ஏவிவிட்டவர்களின் தரப்பில் 700 பேரைக் கொன்று 2500 பேரைக் காயப்படுத்திய புலிவீரர்களின் செயல், ஆச்சரியமூட்டும் ஓர் அற்புதமாகத் தென்படவில்லையா!

'றிவிரச' மற்றும் சத்ஜய சமர் முனைகளில் ஏற்பட்ட இருதரப்பு இழப்புகளின் விகிதாசார வேறுபாடு, மற்றும் படையினர் செலவிட்ட படைக்கல சக்தியின் அளவு வேறுபாடுகள் என்பவற்றைக் கருத்தில் எடுத்து இரண்டு சமர்களையும் ஆராய்ந்து பார்த்தால், – மரபுவழிப் போர்முறையில் – 'றிவிரச'வைவிட சத்ஜயவில், 'புலிகள் இயக்கம்' தனது போரிடும் திறனில் வளர்ச்சியைக் காட்டியுள்ளது எனலாம்.

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கும் பல்வேறு இராணுவ அம்சங்களில் மேற்குறித்த அம்சமும் ஒன்றாகும்.

ஆயினும், நிலத்தைக் கைப்பற்றும் விடயத்தில் படையினர் பெறுகின்ற தற்காலிக வெற்றிகள், புலிகளின் பக்கமுள்ள மேற்குறித்த வெற்றிகர இராணுவ அம்சத்தை மறைத்து விடுகின்றன என்பதே உண்மையாகும்.

1939 ஆம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் உலகப் போரில், இப்போது சிங்களப் படை நிலங்களைக் கைப்பற்றுவது போலத்தான் கிட்லரின் நாஜிப் படைகளும், வரிசையாக நாடுகளைப் பிடித்தன. புலிகள் இயக்கம் இப்போது தனது படைபலத்தைப் பாதுகாத்தபடி – குறித்த சில நிலப்பகுதிகளில் இருந்து பின்வாங்குவதைப் போலத்தான், அமெரிக்கா – பிரிட்டன் உள்ளிட்ட நேசநாடுகளின் அணியும் அப்போது, சில பிராந்தியங்களை விட்டுப் பின்வாங்கித் தங்களை நிலைப்படுத்தத் தொடங்கின.

ஆயினும், நிலங்களைக் கைப்பற்றி வைத்திருந்த நாஜிப் படைகளால் போரை வெல்ல முடியவில்லை. அது நிலங்களைக் கைப்பற்றிக் கைப்பற்றி, அதுகாரணமாக ஏற்பட்ட இராணுவத் தவறுகளினால் போரில் தோற்றது.

எதிரிப் படையானது அரசியல் – இராணுவரீதியில் பலவீனப்பட்டுச் சிதைவடையும்போது அதன் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே, உண்மையான இராணுவ வெற்றியாகும். குறித்த சில இராணுவ நோக்கங்களுக்காக அது தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்யும்போது அதன் நிலத்தைக் கைப்பற்றுவது என்பது, ஒரு நிரந்தர இராணுவ வெற்றியாகக் கொள்ளப்பட முடியாதது.

கிட்லரின் படைகள் படித்த அதே இராணுவப் பாடத்தைத்தான் ரத்வத்தவின் படைகளும் படிக்கப்போகின்றன என எதிர்வு கூறுவது தவறாகுமா?



உண்மையில், 'சத்ஜய' பெற்ற வெற்றி இதுமட்டும்தான்!



www.eelamview.com

www.eelamview.com



# "நுனிக் கொம்பர் ஏறினார்"





சரத் தம்பரத்து இரகசியத்திற்கும் சிங்கள அரசியலுக்கும் இன்று எந்த வேறுபாடுமில்லை. சந்திரிகா தொட்டு ரத்வத்தை வரை எல்லாருமே சரத் முனசிங்கா ஆகிவிட்டதால், எது உண்மை என்பதே அங்கு எவருக்கும் புரியாதபுதிர். ஒரு பக்கத்தில், பொறுக்காது, இனியும் போர்ச் செலவை சிங்களப் பொருண்மியம் பொறுக்காது எனப் புள்ளி விபரங்களோடு ஊர் ஊராகச் சென்று விளக்கம் கொடுக்கும் ஜி.எல் பீரிஸ், ஒரு வழியாக இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்து முடித்துள்ளார். கனமான அமைச்சர்களான விக்கிரமரத்தினா, குணரத்தினா, கதிர்காமர் எல்லாரையும் அமெரிக்கா கூட்டிச் சென்று உலக வங்கியிடம் மடியேந்தி நிற்கின்றார். சிறீலங்காவின் மொத்த தேசிய உற்பத்தி 3½ விழுக்காட்டைத் தன்னும் தாண்ட முடியாத நிலையில் பணவீக்கமோ 15 விழுக்காட்டை தாண்டிவிட்ட நிலையில்,போர்ச்செலவோ 5000 கோடிரூபாவை அண்மித்துப் பாய்ந்து செல்கையில், பங்குச் சந்தையோ 600 புள்ளிக்கு குறைவான அடிமட்டத்தில் அலைபாய்கையில், தென்னாசியாவிலே கடைநிலை பொருண்மிய வளர்ச்சி இவ்வருடம் இங்குதான் எனப் பொருமுகின்றனர் சிங்களத்தின் பொருளியலாளர்.

ஆனால், மறுபக்கத்தில் ரத்வத்தையோ தனது பக்கத்தில் தளுவத்தைகள். சமரசேகராக்கள், ரணசிங்காக்கள், ராஜகுருக்கள் ஏன் சரத்முனசிங்காவைக்கூட வைத்துக்கொண்டு கொழும்பில் இராணுவ தர்பார் நடத்துகின்றார்.'புலிகளை முடித்துவிட்டுத்தான்மறுவேலை; எப்பாடுபட்டும் போர் தொடரும்; எப்படி எனது புதிய மூலோபாயம்?' என இராணுவக் கூச்சலகளிட்டுத் தன்னைத்தானே மெச்சிக்கொள்கின்றார். என்ன அவரின் புதிய மூலோபாயம்? நவீன மரபுவழி இராணுவ தளபாடங்களை பெருமளவில் பயன்படுத்துதல்; கிழக்கு மற்றைய இடங்களிலுள்ள பெருமளவு துருப்புக்களை வட முனைப் போர் அரங்கினுள் நகர்த்தல். 1994ஆம் ஆண்டில் இராணுவப் பரம்பல் எப்படியிருந்தது? 45 விழுக்காட்டு படையினர் கிழக்கில், கொழும்பில் 12 விழுக்காடு, எல்லைப்புறத்தில் 22 விழுக்காடு, மிகுதியே யாழ்ப்பாணத்தில். இப்போது கதையே மாறிவிட்டது என்கிறார் தளுவத்தை. இவற்றின் பொருள், இராணுவப் பூதத்தின் பெரும் பசிக்கு மேலும் மேலும் பெருமளவில் தீனி போடவேண்டும் என்பதேயாகும். வடபகுதியில் 50 விழுக்காட்டிற்கு மேலாக படையினர் குவிக்கப்படும்போது, அதேயளவு படைகள் புதிதாக சேர்க்கப்படவேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவேதான் இப்போது சிங்களத்தில், ஒவ்வொரு நாளும் சிங்கள இளைஞர் இராணுவத்தில் சேரும் நாளே எனப் பிரகடனப்படுத்துகின்றார் தளபதி தளுவத்தை. எனவே, சிங்கள அரசியலில் புதிய மேலாதிக்க சக்திகளாக ரத்வத்தை குழுவினர் மாறிவிட்டனர் என்பது ஒன்றும் இரகசியமல்ல. இவர்களின் இராணுவப் பசி மேன்மேலும் பூதாகரமாக அதிகரிக்கின்றது.

இதேவேளை, இரண்டும் கெட்டான் நிலையிலிருக்கும் சந்திரிகா என்ன செய்கின்றார்? சொல்கின்றார்? நாட்டின் அபிவிருத்தியில் பெரும் கவனம்கொண்டவராகக் காட்டிக்கொள்ள – ஜனாதிபதி மாளிகையாகிவிட்ட அலரி மாளிகையில் – நாள்தோறும் மணிக்கணக்கில் உயர்மட்ட மாநாடுகளை நடத்துகின்றார்; மிகுதி நேரத்தில் செவ்விகள் வழங்குகின்றார். அவரது பரபரப்பான செவ்வியொன்று, புரட்டாதி மாத இறுதியில் வெளிவந்த புரொன்ட்லைன் ஏட்டில் வெளியாகியது. அவரது ஆலோசக வட்டத்தில் இடம் பெறும் ராம் மாணிக்கலிங்கத்தால் இச் செவ்வி காணப்பட்டதால், சந்திரிகாவின் ஒப்புதலோடுதான் கேள்விகள் கேட்கப்பட்டிருக்க முடியும். மூன்றாம் தரப்பு நாடொன்றை தான் நடுவராக ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும், அவ்வாறான நிலையில் புலிகள் நிபந்தனையின்றி பேசமுடியும் என்று கூறும் அவர், தான் ஒருபோதும் குறிப்பிட்டதொரு காலக்கெடுவினுள் போர் முடிவடையும் என்று கூறியதில்லையென்றும் வேறு கூறிவைக்கின்றார். இவ்வாறாக தன்னையொரு மென்போக்காளராக அவர் காட்டிக் கொள்கின்றார். ஆனால் இச்செவ்வி வெளிவந்த ஒருசில நாட்களுள் படாதபாடுபட்டு கிளிநொச்சியில் இராணுவம் காலடி வைத்தபோது, கதையை மாற்றினார் ரத்வத்தை. தலைவியின் கருத்தைப் புறம் தள்ளிய அவர், கணிசமான ஆயுதங்களை புலிகள் கீழே வைத்தாலே பேச்சு எனக்கூறி, தன்னை கறாரான கடும்போக்காளராகக் காட்டிக் கொள்கிறார். நல்லவேளை,புலிகள் கீழே வைக்கவேண்டிய ஆயுதங்களில் முல்லைத்தீவில் தனது இராணுவம் வாரிவழங்கிய ஆயுதங்களும் உள்ளடங்கவேண்டுமா என்பது பற்றி அவர் ஒன்றும் கூறாது விட்டுவிட்டார்! இது மட்டுமா? கவலையுறும் தொழில் முனைவோர்க்கு, ''அடுத்த வருடம் போர்ச் செலவு கணிசமாகக் குறையும்'' என சந்திரிகா ஆறுதல் கூற ரத்வத்தையோ, ''அதுபற்றி நிச்சயமாகக் கூறமுடியாது'' ('சண்டே ரைம்ஸ்' செவ்வி – 7. 10. 96) என்கின்றார்.

இவ்வாறாக இவர்கள் எல்லாரும் தம்முதுகிலேறி குதிரைச் சவாரி செய்ய வாக்களித்து வாய்ப்பளித்த சிங்கள வாக்காளப் பெருமக்களோ –இதுவரை இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? தாமுண்டு 2700 கோடி மானியம் உண்டு என்று இருந்தவர்கள் –இப்போது தவித்துத்தான்போனார்கள். ஏனெனில், திடீரென அவர்களைப் பார்த்து கோதுமைக்கு 700, உரத்திற்கு 150, நெல்லுக்கு 100, சமுர்த்திக்கு 800, கல்வி சுகாதார இலவசங்கட்கு 950 என கோடி கோடியாக 2700 கோடி செலவளிக்க முடியாது. ''அபிவிருத்தியா அல்லது குறைந்த விலையில் பாண் தின்பதா?'' என கேள்வி கேட்டு, அவர்களின் பதிலுக்கு காத்திராமலேயே,சந்திரிகா உலகவங்கி உத்தரவுகளை நிறைவேற்றத் தொடங்கிவிட்டார். கும்பி கொதிக்கத் தொடங்கும் சிங்களவர் விரைவில் கம்பெடுத்து, சந்திரிகாவை சங்கடத்தில் மாட்டிவிடுவர் என, அவர்களை நன்கறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக சிங்களத்தில் சிக்கல் நிறைந்த பக்கங்கள் நீள்கின்றன.

*வே. பாலகுமாரன்*

இதேவேளை தமிழீழ மக்கள் நிலை எவ்வாறுள்ளது? எம்மக்களும் பல வினாக்களை, ஐயங்களை எழுப்புகின்றனர். எவ்வளவு காலம் இப்போரை சிங்களப் பொருண்மியம் தாக்குப் பிடிக்கும்? முல்லைச் சமர் வெற்றியின் பின் புலிகட்கு வெற்றிமேல் வெற்றியாக குவியுமா? எவ்வளவு விரைவில் தமது விடிவு விரைவுபடுத்தப்படும்? இவை எம்மக்கள் கேளாமலே கேட்கும் கேள்விகள். இந்நம்பிக்கைகளில் சற்றுத் தொய்வேற்பட்டாலும் தளர்ச்சியடைகின்றார்கள். இங்கேதான் எம்மக்கள் மனங்கொள்ளவேண்டிய பெரும் செய்தியொன்றுண்டு. தனது இயங்குவிதிகட்கு அமைய இயங்கும் வரலாற்றன்னை மிகவும் பொறுமையானவள் தமிழ்த் தேசிய இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கு சிங்களம் தனக்கு முன்னுள்ள சகல தெரிவுகளையும் பயன்படுத்தி – தனது ஒருவழிப் பாதையின் முடிவை அடையும் வரை, வரலாறு காத்து நிற்கின்றது; வரலாற்றின் தவிர்க்க முடியாத நியாயப்படுத்தல் இது.



ஒரு கணம் வரலாற்றின் நீண்ட பக்கங்களைப் புரட்டிப் பார்க்கலாம். அன்று தொட்டு இன்று வரை சிங்களம் பயன்படுத்திய தெரிவுகள் எவை? 1940 களிலிருந்தே பதவியாசை காட்டி விலைபேசி, அரை – முழு மந்திரிப் பதவி வழங்கிய தெரிவு முதல் தெரிவாகின்றது. இது, பொன்னம்பலம் தொட்டு தேவானந்தா வரை இன்றும் நீள்வது அதிசயம்தான். விலை போவது தமிழர் தலைவர் எனப்படுவோரேயன்றி தமிழரல்ல என உணரப்பட்டபோது, தமிழரை சட்டம் போட்டு மட்டம் தட்டும் தெரிவு. ஆனால், நாடாளுமன்ற சனநாயக போர்வையை தமிழர் தூக்கி வீசியபோது, அடிகொடுத்து அடிபணிய வைக்கும் தெரிவு; இனக்கலவரங்கள், இராணுவ அடக்குமுறைகள். இவை எதிர்மாறான பலனைத் தந்தபோது உடன்பாடு, ஒப்பந்தம் என ஏமாற்று வித்தை காட்டும் தெரிவு. இவையெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிப்போக, வேறு தெரிவின்றி இப்போது இறுதித் தெரிவாக, முழுமையான போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது சிங்களம். இதுவே வரலாறு எதிர்பார்த்த தருணம். இத்தெரிவிலும் நம்பிக்கையை இப்போது சிங்களம் இழப்பதையே, சந்திரிகாவின் அண்மைக்கால செவ்விகள் குறிப்பதாக நாம் கொள்ள முடியும். எனவே, மீண்டும் பழைய வரலாற்றுக் காலத்தில் பயணிக்க சந்திரிகா முயலக்கூடும்.

எம்மக்களுக்கு மேற்குறிப்பிட்ட அரசியல் மிகக் குழப்பகரமானதாக – முரண்பாடுகள் நிறைந்ததாக – தோற்றம் கொடுப்பதில் வியப்பில்லை. அத்தோடு, முழுமையானபோர் என்பதுஎம் மக்களின் மீது முழுமையான அவலத்தை விதைப்பதும் என்றாகிவிடும். ஆனால், இங்கேயுள்ள வியப்பு என்னவென்றால் இக்காலப்பகுதியே, புலிகள் வரலாறே வியக்கும்வண்ணம் பெரு வெற்றிகள் பெறும் – பெறப்போகும் காலமாகவும் அமையப்போகின்றது. தமிழ் மக்கள் போராட்டம் வெற்றி, தோல்வி என்கிற நிலை தாண்டி தீர்க்கமான கட்டத்தினை நோக்கி நகர்கின்றது. இந் நிகழ்வுகள் யாவற்றையும் மாவோவின் வார்த்தையில் சுருக்கமாகசொல்வதானால், ''போரில்தாக்குதலும் தற்காப்பும் – வெற்றியும் தோல்வியும் – முன்னேறுதலும் பின்வாங்குவதும் – ஒன்றோடொன்று முரண்பட்டவைதான். ஆனால் ஒன்றின்றி மற்றதில்லை. இரண்டு கூறுகளுமே ஒரேவேளையில் ஒன்றோடொன்று மோதுகின்றன; ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. இவை போர் என்கின்ற முழுமையை உருவாக்குகின்றன; போரின் வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றன; இறுதியில் அதன் சிக்கல்களுக்கு தீர்வு காணுகின்றன '' என்று அமையும்.

– எனவே, முழுமையான போர் என்கிற நிலையை உருவாக்க சந்திரிகா – ரத்வத்தை குழு வரலாற்றின் கருவியாகப் பயன்படுவதும், அன்று தொட்டு இன்றுவரையிலான தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியாக அமைவதும் பொருத்தமே. இதனை வேறு விதமாக கூறினால், எவர் விடுதலைப் போரைக் கருவறுக்க முற்பட்டனரோ அவர்களே விடுதலைப் போர் வெல்லக் கருவியாகிவிடுவர். முல்லைச் சமரிலே புலிகள் பரிணாமம் அடைய வேண்டும்என ஆசீர்வதித்து ஆயுதங்கள் வழங்கியோர் யார் என்பதை உணர்ந்தால், இச்சமன்பாட்டைப் புரிவது கடினமாயிராது.

இப்போது மீண்டும் சிங்களத்தின் நிலையைப் பாருங்கள். தான் தொடங்கிய பெரும் போரை இடையில் நிறுத்த சிங்களத்தால் முடியாது; போரைத் தொடர்வதாயின் இறுதியானதும் பெரும் பாதகமானதுமான விளைவுகள் ஏற்படும். இரண்டே இரண்டு வழிகள்தான் மீதமுள்ளன. ஒன்று, வலுக்கட்டாயமாக சிங்கள அன்னையரின் கொந்தளிப்பிற்கு மத்தியில் ஆள் திரட்டல்; மற்றது, போர்ச் செலவு எவ்வளவு ஆனாலும் அதை ஈடுகட்ட ஒட்டுமொத்தமான வரிவிதிப்பு, இப்போது வெளிவரும் செய்திகளின்படி மிகவிரைவில் பொருட்கள், சேவைகட்கான வரி (Goods and Services Tax) என புதிய வரியொன்று விதிக்கப்படும் எனத் தெரிகின்றது. இதுவொரு கொடியவரி. இவ்வரியானது உள்நாட்டில் வழங்கப்படும் சகல பொருட்கள் (இறக்குமதி செய்யப்படுபவையுட்பட), சேவைகட்கு எவ்வளவு விழுக்காடு வரியினையும் விதித்து, அதனை ஆயவரிபோல மொத்தமாக அறவிட நிதியமைச்சருக்கு அதிகாரம் வழங்கும். இதன் பளு முழுவதும் விலையேற்றமாக சிங்களவர் முதுகிலே பாறாங்கல்லாகி அதல பாதாளத்துள் அவர்களைத் தள்ளிவிடும்.

கட்டாய இராணுவ சேவையினால் சிங்களத் தாய்மாரின் கண்ணீர் ஆறாகப் பெருகி சிங்களத் தலைமையை அதில் மூழ்கடிக்கும். இது பற்றிய மேலதிக தகவல் வேண்டுமாயின், நாம் ருஷ்யா செல்ல வேண்டும். செச்சென்ய ஆக்கிரமிப்பிற்கு படைப் பற்றாக்குறையைப் போக்க இம்முறையை யெல்ட்சினின் ஆமோதிப்போடு பின்பற்றி, பல்லாயிரம் பேரைப் பலி கொடுத்த முன்னாள் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் பாவெல் கிரச்சேவ் யெல்ட்சினாலேயே மிக்க அவமானகரமான முறையில் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். இப்போது, வீடுவிட்டு வெளியில் வரமுடியாமல் ருஷ்ய அன்னையர் சிந்திய கண்ணீர் கொடும் வாளாக அறுக்கின்றது.

எனவே, ''போர்–மேலும் போர்''என போர் வெறிகொண்டு ஆடும் சிங்களத் தலைமை ஏறுவது நுனிக் கொம்பு. அது முறிந்தால் வள்ளுவர் 2000 ஆண்டுகட்கு முன்னே கூறி நிற்கின்றார் –

> ''நுனிக் கொம்பர் ஏறினார் – அஃதிறந்து
> ஊக்கின் உயிர்க்கிறுதி யாகிவிடும்.''

போரியல் வரலாற்றிலே புது அத்தியாயத்தை எழுதும் தலைவர் அவர்களின் விடுதலைச் சூத்திரம் இது – சிங்களத் தலைமைக்கு அவர் போதிக்கும் அரசியல் அரிச்சுவடி; தமிழீழ மக்கட்கு விடிவின் ஒளி! ○





www.eelamview.com

www.eelamview.com

# தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காப்பவர்கள் மாவீரர்கள்! அவர்கள் எம் தாயக விடுதலையின் காவற் தெய்வங்கள்

## மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறையின்கீழ் தமிழர்களை ஆட்சி புரிய வேண்டும் என்பதே, அன்றும், இன்றும், இந்த அரசின் ஆழமான அபிலாசையாக இருந்து வருகிறது!

இராணுவவாதமும், இனவாதமும் மேலோங்கி நிற்கும் இந்த அணுகுமுறையானது, இனப்பிரச்சினையை என்றும் இல்லாதவாறு சிக்கலாக்கியுள்ளது; சமாதானத்தின் கதவுகளை இறுக்க மூடியுள்ளது; போரை விரிவுபடுத்தித் தீவிரமாக்கியுள்ளது; சிங்களத்தின் பொருண்மியத்தைச் சீரழித்துள்ளது. ஒட்டுமொத்ததில், சந்திரிகாவின் அரசாங்கம் இன்று மீளமுடியாத ஒரு நெருக்கடிக்குள் சிக்குப்பட்டு நிற்கிறது.

சந்திரிகாவின் ''சமாதானத்திற்கான போர்'' தமிழரின் தேசிய வாழ்வைச் சீரழித்திருப்பதுடன், முழு இலங்கையையுமே பேரழிவிற்குள் தள்ளிவருகிறது என்பதைச சர்வதேச சமூகம் இன்று உணரத் தொடங்கியுள்ளது. விரிவடைந்து செல்லும் போருக்கும், இராணுவக் கடும்போக்கிற்கும் எதிராக உலகத்தில் இருந்து எழும் அழுததத்தைத திசை திருப்பும் நோககில் சந்திரிகா அரசு சமாதான சமிக்கைகளைவிடத் தொடங்கியுள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும், புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபததில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களைச் சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கின்றார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்தனையை ஏறறுக்கொள்ளப் போவதில்லை!

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் '' பயங்கரவாதம் '' என்றும், அந்தப் போராட்டத்தைத் தலைமைதாங்கி முன்னெடுக்கும் எமது விடுதலை இயக்கத்தைப் '' பயங்கரவாத அமைப்பு '' என்றும் சர்வதேச உலகில் தீவிர பரப்புரை செய்து, உள்நாட்டிலும் வெளியுலகிலும் எமது இயக்கத்திற்குத் தடை விதிக்க இந்த அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. அதே வேளை, ஓர் ஆண்டிற்குள் புலிகளை ஒழித்துக் கட்டுவோம் என அறைகூவல்களை விடுத்து போரைத்தொடங்குவதற்கு படைகளை தயார் நிலைப்படுத்தியும் வருகிறது. இந்தச் சூழலில், சந்திரிகா சமாதானம் பற்றிப் பேசுவது எமக்குச் சந்தேகத்தையே எழுப்புகின்றது.

நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்லர்; அன்றி, சமாதான வழியில் பிரச்சினையை தீர்ப்பதற்கு எதிரானவர்களும் அல்லர். நாம் வேண்டுவது உண்மையான சமாதானத்தையே. எமது மக்கள், எமது மண்ணில், நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடு இன்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானிக்கக் கூடிய உண்மையான, கௌரவமான, நிரந்தரமான சமாதானத்தையே நாம் விரும்புகின்றோம். இந்தச் சமாதான வாழ்வை தமிழருக்கு வழங்க சிங்கள பௌத்த பேரினவாத சகதிகள் இணங்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதே!

இன விரோததமும், ஆதிக்கவெறியும், இராணுவத் தீர்வில் நம்பிக்கையும் கொண்ட எந்தவொரு சிங்கள அரசும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணப்போவதில்லை. தமிழீழ மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டு கொண்ட உண்மை இது. சிங்கள – பௌத்த பேரினவாதததின் பாதுகாவலனாகவும், அரசியற் பிரதிநிதியாகவும் விளங்கும் சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு தமிழ்மக்களுக்கு உண்மையான சமாதான வாழ்வை உருவாக்கிக் கொடுக்கும் என நாம் நம்பவில்லை. இந்த நம்பிக்கையீனத்தின் அடிப்படையில்தான், தாம், மூன்றாம் தரப்பு நடுநிலையை நாடினோம். எதிர்காலததில் சமாதானப் பேச்சுக்கள் சாததியமாவதானால், அது சர்வதேச மத்தியததுவத்துடன் நடை பெறவேண்டும் என ஒரு வருடத்திற்கு முன்னரே நாம் அறிவிததிருந்தோம்.



முல்லைத்தீவின் ' ஆட்லறி'களுடன் தலைவர் : ''ஆயுதச் சரணடைவு என்பது ஒரு கேலிக் கூத்தான நிபந்தனை.''

ஆனால், சந்திரிகா அரசு அப்பொழுது எமது யோசனையைக் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, வடபுலத்தில் ஆக்கிரமிப்புப் போரை விஸ்தரித்து, இன நெருக்கடியை மோசமாக்கி, சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரை, இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவ பலத்தைத் துரும்புச்சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம்பேச முயலும் ஓர் அரசிடம் நாம் நீதியை எதிர் பார்க்க முடியாது. அதனாற் தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்புநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம். படைகளை விலக்குதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியற் பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாடு காணவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது நியாயமான நிலைப்பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள – பௌத்த பேரினவாதமானது, காலம் காலமாக, இராணுவ மேலாண்மையில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது." இராணுவ பலத்தின் நிழலின் கீழேயே சந்திரிகாவினது ஆட்சியும் நடக்கிறது. எனவே, இராணுவ பலத்தைக் கைவிட்டு, தார்மீக பலத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகத்துக்குரிய விடயமே.

சிங்கள ஆட்சியாளரிடம் கைநீட்டி நின்று நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது; நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும்! போராடாது, இரத்தம் சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலைபெற்றுக் கொண்டதாக வரலாறு இல்லை.

ஆகவே, நாம் போராடுவோம்; எமது இரத்தத்தை விலையாகக் கொடுத்து எமது இலட்சியத்திற்காகப் போராடுவோம்; வெற்றிகளை ஊக்கமாக எடுத்து, பின்னடைவுகளைச் சவாலாக ஏற்று, நாம் தொடர்ந்து போராடுவோம்; எவ்வித இன்னல்கள் வந்தாலும், எவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது நாம் தொடர்ந்து போராடுவோம்; எமது மண்ணில் இருந்து சிங்களப்படைகளை விரட்டும் வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும் வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம்!

ஆக்கிரமிப்பாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி அவலக்குரல் எழுப்பி நிற்கும் எமது நேசத்திற்குரியவர்களின் துயரக் கண்ணீரைத் துடைப்போம் என உறுதியெடுத்து, மாவீரர்களுக்கு இன்று எமது வீரவணக்கத்தைச் செலுத்துவோம்.

''புலிகளின் தாகம் 'தமிழீழத்' தாயகம் ''

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com